Registered in Ceylon as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389

National Tamil Daily — தேசிய தினசரி

தபாற்பெட்டி எண்: 49

மலர் 4 — யாழ்ப்பாணம் — சுபகிருது வைகாசி 15 ஆம் நாள் — துல்ஹஜ் 23 — (28-5-62) — திங்கட்கிழமை — இதழ் 106

Jegajothi TOOTH POWDER
SEGAR & Co. MADURAI
ஜெகஜோதி பல்பொடி
சேகர் அன் கோ. மதுரை

# ஹர்த்தாலுடன் மூதூர்

## தேர்தல் பிரசாரம்

## தமிழரசுக் கட்சியின் திட்டம்

திருக்கோணமலை, ஞாயிறு

மூதூர் உபதேர்தலில் போட்டியிடும் தமிழரசுக்கட்சியின் அபேட்சகர் எம். ஈ. எச். முகம்மதலியை ஆதரித்து தமிழரசுக் கட்சி ஜூன் மாதம் 6-ம் திகதி பிரசாரக் கூட்டங்களை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

திருக்கோணமலை, மூதூர் ஆகிய இடங்களில் ஜூன் 5-ந் திகதி சிறந்த முறையில் ஹர்த்தால் அனுஷ்டிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

ஹர்த்தாலைத் தொடர்ந்து தேர்தல் பிரசார வேலைகள் ஆரம்பமாகும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஜூன் மாதம் முதல் வாரத்தில் தனது பிரசாரக் கூட்டங்களை ஆரம்பிக்குமெனத் தெரிகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, தமிழரசுக்கட்சி, ஈழம் முன்னணி ஆகிய கட்சி அபேட்சகர்களுடன் ஒரு சுயேச்சை அபேட்சகரும் போட்டியிடும் மூதூர் உபதேர்தல் ஜூன் மாதம் 28-ந் திகதி நடைபெறும். அன்றே முடிவும் வெளியாகிவிடும்.

## அணு ஆயுத எதிர்ப்பு மகாநாடு

புதுடில்லி, மே 27

காந்தி சமாதான ஸ்தாபனத்தின் ஆதரவில் ஜூன் 16-ம் திகதி புதுடில்லியில் அணு ஆயுத எதிர்ப்பு மாநாட்டை டாக்டர் ராஜேந்திரபிரஸாத் ஆரம்பித்துவைப்பார். சுமார் 1000 விஞ்ஞானிகளும், சிந்தனையாளர்களும் இம் மகாநாட்டில் கலந்துகொள்வார்கள்.

---

## யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரி

### ஆரம்ப என்ஜினியரிங் வகுப்புகள் நடைபெருது

காங்கேசன்துறை, ஞாயிறு

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்பக்கல்லூரியில் ஆரம்ப பொறியியல், வகுப்பு ஆரம்பிப்பதில்லையென்று கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி அறிவித்துள்ளார். இதனால் ஏராளமான மாணவர்கள் அதிருப்தியும் ஏமாற்றமும் அடைந்துள்ளனர்.

கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியில் ஆரம்ப பொறியியல் வகுப்பு ஆரம்பிப்பதற்குப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டதனைத் தொடர்ந்து சுமார் 600 மாணவர்கள் இவ்வகுப்பிற்கான பிரவேச பரீட்சையை இரண்டு ரூபாய் கட்டி எழுதினர். இப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு அடுத்தமாதம் 5-ம் (5-6-62) வகுப்பு ஆரம்பிக்கப்படும் எனவும், கச்சேரியில் இவ்வகுப்பில் படிப்பதற்கு பத்து ரூபா கட்டி அதன் ரசீதும், பாஸ் போர்ட் சைஸ் படம் இரண்டும் கல்லூரிக்கு முதலாம் திகதிக்கு முன் கொண்டு வந்து ஒப்படைத்து அனுமதிப்பத்திரத்தை எடுத்துச் செல்லுமாறும் தெரிவிக்கப்பட்டது.

இக்கடிதம் அனுப்பப்பட்டு இரு தினங்களின் பின் தொழில் நுட்பக்கல்லூரி அதிபர் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில் கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி இவ் வகுப்பு ஆரம்பிக்க வேண்டாமெனக் கூறியுள்ளமையால் இந்த வகுப்பு இக்கல்லூரியில் நடத்தப்படமாட்டாது என்று குறிப்பிட்டுள்ளார்.

மற்றைய கல்லூரிகளில் ஆரம்ப பொறியியல் வகுப்புக்கான பாடங்கள் போதிக்கப்பட்டு வருவதனால், இதற்கென ஒரு வகுப்பு நடத்துவது நன்று அல்ல என்பதே நிரந்தரக்காரியதரிசி வகுப்பு நடத்தப்படக் கூடாது என்பதற்குக் கூறியுள்ள காரணமாகும்.

---

## நஞ்சுண்டு இளைஞன் தற்கொலை

### இரு கடிதங்கள் விட்டுச்சென்ருர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

குப்பிளானைச் சேர்ந்த 19 வயதான என். பாலசுந்தரம் நேற்று நண்பகல் பொலிடோல் குடித்து தற்கொலை புரிந்து கொண்டார். இவர் சங்கானை பேக்கரி ஒன்றில் வேலை பார்த்து வந்தார்.

இவர் விட்டுச்சென்ற கடிதங்களில்ஒன்று வவனியா முன்னை நாள் பிரதிநிதிக்கு விலாசமிடப்பட்டிருந்தது. முடிவு பெருத அக்கடிதத்தில் "நீங்கள் அரசியற் துறவறம் பூண்டீர்களே" என்று இறந்தவர் குறிப்பிட்டிருக்கிருர். மற்றக்கடிதத்தில், தான் தற்கொலை புரிந்துவிட்டதாக வவனியாவிலும் சங்கானையிலும் இருக்கும் தன் இரு நண்பர்களுக்கு அறிவிக்கும்படி அவர் தன் தகப்பனிடம் கேட்டிருந்தார்.

தற்கொலை புரிந்தவரின் தாயாரான நல்லமுத்து மரண விசாரணையின்போது கூறியதாவது:-

இறந்த என் மகனுக்குக் குடிக்கும் பழக்கம் உண்டு. அவருக்குப் பணத்தட்டுப்பாடும் இருந்தது. சம்பவம் நடந்த தினத்தன்று மத்தியானம்போல் அவர் எங்கள் வளவுக்குள் உள்ள கோவில் முன்னல் படுத்திருந்தார். குடித்துவிட்டுப் படுத்திருக்கின்ருர் என்று நான் எண்ணினேன். என் கணவனுக்கு மத்தியானச் சாப்பாட்டைக் கொடுத்துவிட்டு என் மகனை அழைக்கச் சென்றபொழுது அவர் பக்கத்தில் ஒரு கோப்பையும் பொலிடோல் குப்பியும் கிடக்கக்கண்டேன். பொலிடோல் குடித்துவிட்டார் என நான் எண்ணி அவரை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றேன். அங்கு அவர் உயிர் துறந்தான்"

மரணவிசாரணை அதிகாரி திரு. கனகரத்தினம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

---

## இன்று மேயர் தேர்தல்

யாழ்ப்பாணம், திங்கள்

இன்று பிற்பகல் யாழ்ப்பாணம் மாகநரசபையின் விசேஷ கூட்டம் நடைபெறும். இக் கூட்டத்தில் புதிய மேயர் தெரிவு செய்யப்படுவார்.

---

## சென்னையில் ராஷ்டிரபதி

சென்னை, மே 27

ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் 'ராஜகம்ச' என்ற விமானம் மூலம் நேற்று சென்னை வந்து சேர்ந்தார்.

விமான நிலையத்தில் சென்னை முதல் மந்திரி திரு. காமராஜர், சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், சென்னை மேயர் உட்படப் பல பிரமுகர்கள் அவரை வரவேற்றனர்.

விமான நிலையத்தில் பொது மக்கள் பலர் திரண்டு நின்று ராஷ்டிரபதியை வரவேற்றனர். ராஷ்டிரபதி, காமராஜருடன் மைலாப்பூரிலுள்ள தமது இல்லத்துக்குச் சென்ருர்.

சென்னை வந்து சேர்ந்த ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் இங்குள்ள ஆந்திர மகில சபாவின் வெள்ளிவிழா மண்டபத்தைத் திறந்துவைத்தார். இம்மண்டபம் ஆந்திர நிதியுதவியுடன் கட்டப்பட்டது.

---

## ஒரேநாளில் ராஜகுடும்பத்தில் மூவர் மரணம்

இந்தூர், மே 27

நரஸிங்கர் ராஜ குடும்பத்தைச் சேர்ந்த மூவர் ஒரே நாளில் இறந்தனர்!

முன்னுள் மன்னரின் மாமனான ரகுவீரசிங் சுவாமி தரிசனத்திற்காகச் செல்லும் வழியில் பாரிசவாயு வலிப்பு ஏற்பட்டது. ஆஸ்பத்திரியில் அவர் இறந்தார். அதேதினம் ரகு வீரசிங்கின் மனைவி நாராயணி தன் அறையில் இருந்தபோது புடவையில் தீப்பிடித்ததால் மாண்டார்; தீயை அணைக்க ஓடிவந்த அவரது மாமனரும் எரிகாயங்களினல் மரணமானர்.

---

## சீனப் பிரதமர் பாகிஸ்தானுக்கு விஜயம்?

கராச்சி, மே 27

சீனவுக்கும், பாகிஸ்தானுக்குமிடையே ஒரு நேச ஒப்பந்தம் ஏற்படுவதற்குத் தற்போது முயற்சிகள் நடைபெற்றுவருவதாயும், சீனவே சமீபத்தில் இந்த முயற்சியை எடுத்துக் கொண்டதாயும் நம்பகமான வட்டாரங்களிலிருந்து தகவல் கிடைத்துள்ளது. சீனப் பிரதமர் திரு. சூ என்-லாய் பாகிஸ்தானுக்கு விஜயம்செய்யக்கூடும் என்றும் அவ் வட்டாரங்கள் அறிவித்தன.

---

## ஸியராலியோன் தேர்தல் முடிவு

லண்டன், மே 27

ஸியராலியோனில் நடைபெற்ற தேர்தலில் பிரதம மந்திரி சர் மில்டனின் கட்சிக்கு வெற்றி கிடைத்திருக்கிறது. சர் மில்டன் தனது தொகுதியில் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுவிட்டார். சட்டசபையில் மொத்த ஸ்தானங்கள் 43.

---

## "ஆகட்டும்"

சென்னை, மே 27

சென்னை முதல்மந்திரி திரு. காமராஜ் சாதாரணமாக கூறும் "ஆகட்டும்" "முடியாது" என்ற வார்த்தைகள் தேசிய முக்கியத்துவம் பெற்றுவிட்டன என்று ஸ்ரீமதி துர்க்காபாய் தேஷ்முக் ராஜாஜி ஹாலில் கூறினர். "மக்களின் அன்பைப்பெற்ற முதல் மந்திரியின் உறுதிக்கு அவை சான்று என்ருர்." டெலிபோனில் நான் அழைத்தவுடன் "என்னம்மா" என்று கேட்டார், மகாநாட்டுக்கு அழைத்தேன். "ஆகட்டும்" என்ருர். கடிதம் அனுப்பாமலே கூட வந்துவிடுவார்" என்றும் ஸ்ரீமதி தேஷ்முக் கூறினர்.

---

தமிழரசுக் கமிட்டிக் கூட்டம்

## கட்சியின் சட்டதிட்டங்கள் ஆராயப்பட்டன

### ஆனால் வாக்கெடுப்பு நடைபெறவில்லை

மன்னர், ஞாயிறு

இன்று இங்கு தொடர்ந்து நடைபெற்ற தமிழ்அரசுக் கட்சியின் கமிட்டிக் கூட்டத்திலே கட்சியின் சட்டதிட்டங்கள் கட்சி அங்கத்தவர்களால் கலந்தாலோசித்து ஆராயப்பட்டன. காலையில் ஆரம்பிக்கப்பட்ட இச்சட்டதிட்ட விவாதம் நண்பகல் போசனத்திற்குப் பின்னும் தொடர்ந்து நடைபெற்றது. மாலை 6 மணி வரை இக்கமிட்டிக் கூட்டம் நடைபெற்றும் சட்டதிட்டவிவாதத்தை யொட்டி வாக்கெடுப்பு ஒன்றும் எடுக்கப்படவில்லை.

கமிட்டிக்கூட்டம் மன்னர் எம். பி. திரு. அழகக்கோன் வீட்டில் நடைபெற்றது.

தமிழரசுக் கமிட்டிக் கூட்டத்தில் பங்குபற்ற மன்னருக்கு வந்திருந்த தமிழரசுக்கட்சி அங்கத்தவர்களெல்லாம் இன்று மாலை ரயிலிலேயே தங்கள் தொகுதிகளுக்குத் திரும்பினர்கள்.

---

## கூட்டாட்சியே சிறந்தது

எகிப்து, மே. 27

ஜனதிபதி நாஸர் வாழ்நாள் முழுவதும் பதவிவகிக்கவேண்டும் என்ற கோரிக்கையை நிராகரித்துள்ளார். தனி நபரின் விருப்பங்கள் தேசிய அமைப்பின் திட்டத்தைப் பாதிக்கக்கூடாது என்றும் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார். கூட்டாட்சி முறையே சிறந்ததென்றும் ஜனதிபதி நாஸர் கூறியிருக்கிருர்.

## இன்று உங்கள் பலன்

—சோதிடஆசான்செ.தெல்லியூர்

சுபகிருது ஆண்டு வைகாசித் திங்கள் 15ம் நாள். திங்கட் கிழமை (28-5-62) ஹிஜ்ரி ஆண்டு 1381, துல்ஹஜ் மாதம் 23ம் பிறை.

இன்று காலை 7-14 வரை நவமி. பின்னர் தசமி பின்னிரவு 5-15வரை. அதன் பின்னர் ஏகாதசி. பகல் 1-36 வரை பூரட்டாதி. அதன் பின்னர் உத்தரட்டாதி. பகல் 11-40வரை மரணயோகம். மேல் சித்தயோகம். அக்கினி நாள் முடிவு. சுபகரும முயற்சிக்கு நலம். இராகுகாலம் 7-22 முதல் 8-52வரை.

திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், மகம் பூரம் ஆகிய நட்சத்திரங்களுக்கு இன்று படுபட்சி நாளாகையால் இன்று இவர்கள் சுப கருமங்களை மேற்கொள்ளுதலாகாது.

### இராசிப்பலன்

பூரட்டாதி—உத்திரட்டாதி: தேகநலம் விருத்தி, தொழில் நன்மை, தெய்வவழிபாடு, தார்மீக செலவு.

மேடம்: தெய்வ வழிபாடு, தருமவழிச்சிந்தனை, சுபசெய்தி, மனநிம்மதி.

இடபம்: நல்லோர் சந்திப்பு, சுபசெய்தி, பணவரவு, உற்சாகம்.

மிதுனம்: நண்பர் சேர்க்கை, குடும்பநிம்மதி, மாதுருவழி உதவி, பணவரவு.

கடகம்: போசனசுகம், சுபசெய்தி, தொழில்நன்மை, ஊழியர் உதவி.

சிங்கம்: ஆரோக்கிய விருத்தி, சகோதரஉதவி, நிம்மதி, கல்விச்சிறப்பு.

கன்னி: வாக்குவன்மை, பணவரவு, சகோதர உதவி, சொத்து ஆதாயம்.

துலாம்: தெய்வ வழிபாடு, புண்ணியச் செலவு, பிரயாண சுகம், பணவரவு.

விருச்சிகம்: குடும்பசுகம், சுபகருமச் சிறப்பு, தெய்வவழிபாடு, பணவரவு.

தனு: நண்பர் சேர்க்கை, இனசன விருந்து கொண்டாட்டம், மதிப்புயர்ச்சி, மாதாவழி உதவி.

மகரம்: பணவரவு, தொழிற் சிறப்பு, புகழ், நல்லோர்நட்பு, சுகம்.

கும்பம்: நல்லோர் நட்பு, பணவரவு, தொழில் நலம், தேகாரோக்கியம்.

மீனம்: தெய்வசிந்தனை, குடும்பசுகம், சுபகாரியவெற்றி, மதிப்பு.


### வரி விளம்பரம்

**விளம்பரம்**

வானொலிப் பெட்டிகள், மின்சார விசிறிகள், அடுப்புகள், ஸ்திரிக்கைப் பெட்டிகளும், மணிக்கூடு இன்னும் பலவித சாமான்களும் விற்பனைக்குண்டு இன்றே தவறாது விஜயஞ் செய்து பாருங்கள் மலாயன் ரேடியோ சேவிஸுக்கு 45, கஸ்தூரியர் வீதி, யாழ்ப்பாணம்.

**விளம்பரம்**

உங்கள் வீடுகள் நவீன முறைகளில் அலங்கரிக்கவேண்டுமாயின் யாழ்ப்பாணத்தில் முதல் ஸ்தானத்தை வகிக்கும் ஸ்தாபனம் மலாயன் ரேடியோ சேவிஸ், 45, கஸ்தூரியா வீதி, யாழ்ப்பாணம்.

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் சீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50 தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப்பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனாம்.

**வைத்தியர் பரிபூரணானந்தர்.**
[illegible]லாயபிள்ளையார்கோவிலடி,
யாழ்ப்பாணம்.


# 10,000 பேரில் 8 பேருக்கே வீடுகட்ட கடன்

## போதுமான தகவல்கள் தராததே காரணமாம்

கொழும்பு, ஞாயிறு

வீடு கட்ட கடன் அளிக்கப் படவிருந்த 10,000 பேர்களில் 8 பேர்களுக்கே சென்ற ஆண்டு ஜூன் மாதம் ரூபா 2000 வீதம் கடன் அளிக்கப்பட்டது.

தேசிய வீடமைப்பு இலாகாவுக்கு கடன்கள் கோரி வந்த 70,000 மனுக்களில் 10,000 மனுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. ஒரு தொகுதிக்கு 75 பேர் என்ற அடிப்படையில் இத்தொகை தெரிவு செய்யப்பட்டது. மிகுதிப் பேர்கள் கடன்கள் பெறுவதற்கு அவசியமான தகவல்களைக் கொடுக்கவில்லை என இலாகா அதிகாரி ஒருவர் கூறினர். ஒவ்வொருவரும் தனிப்பட்ட ஜாமீனும் கிராமாதிகாரி அல்லது டி. ஆர். ஓ. விடமிருந்து சிபார்சுக் கடிதமும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். வீடு கட்டப்படவிருக்கும் நிலம் எது என்பதையும் அவர்கள் குறிப்பிடவேண்டும்.

ஆனல் பெரும்பாலானேர் இந்த விபரங்களைத் தரவில்லை எனவும், நிபந்தனைகளைத் தளர்த்த வேண்டுமெனவும் கோரியிருக்கிறார்களாம். ஆனல் வீடமைப்பு இலாகா நிபந்தனைகளைத் தளர்த்தத் தயாராய் இல்லை.

## லொறி விபத்து

ஹிங்குராக்கொடை, ஞாயிறு

கொழும்பிலிருந்து சம்மாந்துறையை நோக்கிச் சென்று கொண்டிருந்த ஒரு லொறி, மன்னம்பிட்டிய என்ற இடத்தில் விபத்துக்குள்ளாகியது சாரதியும், கிளினரும் இதனல் காயமடைந்தனர். லொறியிலிருந்த சாமான்கள் சேதமடைந்தன.

## ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமை

கொழும்பு, ஞாயிறு

செகன்டரி பயிற்சி பெற்ற ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த 4000 அங்கத்தவர்கள் அடுத்த ஞாயிற்றுக் கிழமை கண்டியில் கூடி, ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமை பற்றிய ஒரு தீர்மானத்தின்மீது ஆலோசிக்க விருக்கின்றனர்.

தேசியக் கல்விக் கமிட்டியில் நம்பிக்கையில்லை என்ற வாக்கெடுப்பு பற்றியும் 3-ம் வகுப்பிலிருந்து ஆங்கிலத்தை கட்டாயபாடமாக்க வேண்டும் என்ற தீர்மானம் பற்றியும் அது காரணம் தேசீய சேவையைப் பாடசாலைகளில் கட்டாயமாக்குவதை அது சமர்பிக்குமென்றும் தெரிகிறது.



திரு. கா. சரவணமுத்து

ஸ்ரீ சரவணபவா நாடக மன்றத்தின் 5-வது ஆண்டு விழாவில், காலஞ்சென்ற நடன, நாடக விற்பன்னர் திரு. கா. சரவணமுத்து அவர்களின் ஞாபகார்த்தமாக, வருகிற ஜூன் 3-ம் திகதி மாலை வண்ணை வைத்தீஸ்வரவித்தியாலய திறந்த வெளி அரங்கில் நடனங்களும், நாடகங்களும், சொற்பொழிவுகளும் நடைபெறும்.

# 3 மாதங்களுக்கு ஒரு தடவையே இரத்த தானம்

## இரத்த வங்கி எச்சரிக்கை

கொழும்பு, ஞாயிறு

3 மாதங்களுக்கு ஒரு தடவைக்கு மேல் இரத்த தானம் செய்யவேண்டாமென இரத்த வங்கி எச்சரிக்கை விடுத்திருக்கிறது. மூன்று மாதங்களுக்கு ஒருதடவை என்றவிதியை மீறுபவர்களின் தொகை அதிகரித்திருக்கிறதென்றும், பொய்ப் பெயர்களைக் கூறிக்கொண்டு கடந்த சில மாதங்களில் குறைந்தது 40பேர் ஒவ்வொரு மாதமும் இரத்ததானம்செய்ய முயன்றதாய் இரத்த வங்கி அதிகாரிகள் கூறினர்.

பணம்பெறுமுகமாகவே அடிக்கடி அவர்கள் இரத்த தானம் அளிக்க முயல்வதாய்க் கூறப்படுகிறது. மீண்டும் இரத்தம் ஊறி பழைய நிலையை அடைய 3 மாத இடைவெளி அவசியம் எனக் கூறப்பட்டது.

## அனுராதபுரிக்கு பிரதமர் விஜயம்

அனுராதபுரம், ஞாயிறு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அனுராதபுர அபேட்சகர் திரு. கே. பி. ரத்னநாயக்வை ஆதரித்து தேர்தல் பிரசாரம் செய்வதற்காக பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, மந்திரிகள் மைத்திரிபாலா சேனநாயக்கா, சி. பி. டி. சில்வா, சாம் பி. சி. பெர்ணண்டோ, டி. பி இலங்கரத்தின, பி. பி. ஜி கலுகல் ஆகியோரும் இதர எம். பிக்களும் ஜூன் 3-ந் திகதி இங்கு வருவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

திரு. சுயதபாலா டடுலுவத்த கட்சி அபேட்சகராகப் போட்டியிட மனுச்செய்ததை ஏன் கட்சி நிராகரித்தது என்பதை வாக்காளர்களுக்கு விளக்கிக் கூறுவதற்காக பிரதம மந்திரி இங்கு வருவதாக திரு. ரத்னநாயக்கா தெரிவித்தார்.

சிறிமாக போதி பௌத்த கோவிலில் பூசை செய்து தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் ஆரம்பமாகுமெனத் தெரிகின்றது.

# "சமூக ஊழியர்களுக்கு ஊக்கமளிக்கவேண்டும்"

## அரசாங்கத்துக்கு முதலியார் தியாகராஜா யோசனை

மானிப்பாய், ஞாயிறு

"சோஷலிஸ சமுதாயம் ஒன்றில் சமூக ஊழியம் செய்வது இந்நாட்டில் எதிர் நோக்கும் ஒரு பிரச்சினையாகும்" என முதலியார் வி. தியாகராஜா இலங்கை க்ஷயரோக நிவாரண தேசிய சங்கத்தின் சார்பில் டாக்டர் ஜே. எல். எப். ஜயசூரியாவுக்கு ஒரு தங்கப் பதக்கத்தைப் பரிசளித்தபோது கூறினர்.

க்ஷயரோகத் தடுப்பில் டாக்டர் ஜயசூரியா செய்த சேவைகளைப் பாராட்டுமுகமாக இந்தப் பதக்கம் வழங்கப்பட்டது.

"சோஷலிஸ நாடு ஒன்றில் வலிய முன்வந்து சமூகத் தொண்டு செய்வதை குறைவாக மதிப்பிடக் கூடாது ஏனெனில் நாட்டின் பிரமாண்டமான சமூகப் பிரச்சனைகளை அரசாங்கம் தனது சொந்த முயற்சியால்மட்டும் தீர்த்துவிட முடியாது. எனவே தானே முன்வந்து சமூகசேவை செய்தல் ஒரு சோஷலிஸ்ட் நாட்டில் முக்கியமான அம்சமாகும். அரசாங்கம் இதற்குச் சகல ஊக்கமும் அளிக்கவேண்டும். சமூக ஊழியர்களுக்குப் போதுமான ஊக்கத்தை அரசாங்கம் அளிக்கவேண்டும். இந்தியா முதலிய சுதந்திர நாட்டில் சமூக ஊழியர்களுக்குப் பரிசு வழங்குவது போன்ற ஒரு திட்டம் இலங்கையிலும் வகுக்கப்பட வேண்டும்.

இலங்கை க்ஷயரோக தேசிய நிவாரண சங்கம் இவ்விஷயத்தில் பெரும் ஆக்கவேலைகளைச் செய்துவருகிறது. க்ஷயரோகத் தடுப்பு சம்பந்தமாக வலிகாமம் மேற்குக் கிளை மக்களிடையே பெருமளவில் பிரசாரம் செய்திருக்கிறது. அடுத்த வருடத்தில் இன்னும் அதிக வேலை செய்யலாமென எதிர்பார்க்கிறோம்" என்றும் அவர் கூறினர்.

இலங்கை க்ஷயரோக நிவாரண தேசிய சங்க வலிகாமம் மேற்குக் கிளையின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் இந்தப் பரிசளிப்பு நடைபெற்றது.

டாக்டர் எச். பி. செல்லையா தலைமை வகித்தார்.




# மேற்கு இரியானில் சண்டை நீடிக்கிறது

நியுயோர்க், மே 27

மேற்கு இரியான் பிரச்சினைக்கு எல்ஸ்வெர்த்பங்கர் சமர்ப்பித்த திட்டத்தை ஐ. நா. வெளியிட்டுள்ளது. மேற்கு இரியன் பிரச்சினைக்கு சுமுகமான ஒரு தீர்வு காண்பதற்கு இந்தோனேஷியாவும் நெதர்லன்ட்சும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இத்திட்டம் ஒரு அடிப்படையாக இருக்கும் என்று ஐ. நா. தெரிவித்துள்ளது.

இதேசமயம் மேற்கு இரியானில் இந்தோனேஷிய பாரசூட் துருப்புக்களுக்கும் நெதர்லன்ட்ஸ் துருப்புக்களுக்கு மிடையில் தொடர்ந்து சண்டை நடைபெற்றுக் கொண்டிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. 250 பாரசூட் துருப்புக்களை நெதர்லன்ட்ஸ் படைகள் சுற்றி வளைத்துக் கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்தோனேஷியத் தளத்தின்மீது தாக்குதல் நடத்த நெதர்லன்ட்ஸ் முயற்சி செய்தால் பெரிய யுத்தமே ஏற்படும் என்று இந்தோனேஷியப் பாதுகாப்பு மந்திரி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எல்ஸ்வெர்த்பங்கரின் திட்டத்தை இந்தோனேஷியா ஏற்றுக் கொண்டது. நெதர்லன்ட்ஸ் நிராகரித்துவிட்டது.

## கணேசையர் சங்கத்துக்கு வாழ்த்து

தெல்லிப்பழை ஞாயிறு

தென்னிந்திய அறிஞர்களான பேராசிரியசாலை இளந்திரையனும் திருவாட்டி கனகசவுந்தரி இளந்திரையனும், ஈழத்தமிழகத்திற் பிறந்து எப்பால் தமிழகத்திற்கும் அரும்பெருந் தொண்டுபுரிந்த பேராசான் கணேசையா அவர்கள் நினைவாக நடைபெறும் சங்கம் சிறந்து செழிக்க மனமார வாழ்த்துவதாக மாவிட்டபுரம் கணேசையர் தமிழ்ச்சங்கத்திக்கு வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்களுக்கு வித்துவசிரோமணி கணேசையர் நினைவு மலரான "ஞானசூரியன்" பிரதிகள் தமிழ்ச் சங்கச் செயலாளர்ளாகல் அன்பளிப்பாகவழங்கப்பட்டன.

## கம்பளமும் கலா ராணியும்



லண்டனில் நடைபெற்ற இந்திய கம்பளப் பொருட்காட்சியில் இந்திய நர்த்தகி நிர்மலா சென்குப்தா நடனமாடிக்கொண்டிருக்கிறார். கம்பள நெசவாளரான புத்துராமும், நிர்மலாவும் பிரிட்டன் முழுதுமுள்ள கடைகளில் கம்பளக் காட்சி நடத்துவதற்காக இந்தியாவிலிருந்து விசேஷமாக பிரிட்டன் வந்தனர். கோஹினூர் கம்பளம் ஒன்றில் நிர்மலா நடனமாடிக்கொண்டிருப்பதைக் காணலாம்.

## பிரதமர் வாழ்த்துச் செய்தி

கொழும்பு, ஞாயிறு

ஆப்கானிஸ்தான் தேசிய தினத்தையொட்டி அந்நாட்டுப் பிரதமருக்கு, இலங்கைப் பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்கா ஒரு வாழ்த்துச் செய்தியை அனுப்பியிருக்கிறார்.

# "பத்திரிகைகளை எடுக்கும் உண்மைக் காரணம் ஊழல்களை மூடி மறைப்பதற்கே"

—எம். பி.

அநுராதபுரம், ஞாயிறு

"பத்திரிகைகளை எடுக்கும் உண்மையான காரணங்களை மறைப்பதின் மூலம் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மக்களை ஏமாற்றுகிறது" என ஹொரவபதான எம். பி. திரு. ஈ. எல். பி. ஹுருல இங்கு நடைபெற்ற ஒரு கூட்டத்தில் கூறினார். "சுதந்திரமான பத்திரிகைகளை எடுத்து தனது கட்சிக்குச் சாதகமாக உபயோகிப்பதே இதன் நோக்கம்" என்றும் அவர் தெரிவித்தார்.

"வகுப்பு அல்லது மதக்குழப்பத்திற்கு ஊக்கமளிக்காத வகையில் பத்திரிக்கைளைத் தடுக்க நாட்டின் சட்டங்கள் போதுமானவை. பிரிட்டிஷார் கூடச் செய்யத் துணியாத வகையில் அரசாங்கம் பத்திரிகைகளை மேற்கொள்வதற்கு கட்சிக்குள் நிலவும் பிளவுகளை மூடிமறைப்பதே காரணமாகும். குறிப்பிட்ட சில அரசியல்வாதிகள் சம்பந்தப்பட்டுள்ள மோசடிகளை மூடிமறைப்பதே அரசாங்கத்தின் உத்தேசம் இந்த மோசடிகள் வெளியாவதை அரசாங்கம் விரும்பவில்லை. வேலையற்றோர்களின் தொகை என்ன என்பதைப் பிரசுரிக்கவும் இன்றைய அரசாங்கம் விரும்பவில்லை.

புத்திரிகைகளை அரசாங்கம் மேற்கொள்வதுபற்றி ஒவ்வொரு ஜனநாயக நாடும் ஆட்சேபனை தெரிவித்திருக்கிறது. காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயகா அரசியல் பிரச்னைகளை விவாதிக்கும் போது, அதில் கலந்துகொள்ளக்கூட அனுமதிக்கப்படாத சிலர், இன்று அவரது பெயரால் மக்களின் உரிமைகளை ஒன்றன்பின் ஒன்ருக விற்று, சர்வாதிகாரத்தை நிலைநாட்ட முயல்கின்றனர். திரு. பண்டாரநாயகாவின் சார்பில் பேசுவதாகக் கூறுபவர்கள் அவர் உயிருடனிருக்கும்போது அவருடன் பொதுமேடையில் உட்காரக்கூட அனுமதிக்கப்படவில்லை" என்றும் திரு. ஹுருல கூறினர்.

# "தமிழ் மறுமலர்ச்சிக்கு தொண்டு செய்தவர்"

## பரமஹம்சதாசனுக்கு பாராட்டு

நாவலப்பிட்டி, ஞாயிறு

"கவிஞர்களுக்குள்ளே இளம் சமுதாயத்தை உருவாக்கி கிழக்கு மாகாணத்திலே தமிழ் உணர்ச்சியைத் தூண்டியவர். இலங்கையில் தமிழ் மறுமலர்ச்சிக்குத் தொண்டு செய்தவர். இவரது பாடல்களை தாங்கி வருவதில் பத்திரிகைகள் பெருமையடைந்தன".

இவ்வாறு 'ஆத்மஜோதி' ஆசிரியர் திரு. நா. முத்தையா நாவலப்பிட்டி இளம் எழுத்தாளர் சங்கத்தின் ஆதரவில் கவிஞர் ஸ்ரீ பரமஹம்சதாசன் தாயகம் திரும்புவதை முன்னிட்டு அளிக்கப்பட்ட பிரிவுபசார வைபவத்தில் பேசும்போது கூறினர்.

கதிரேசன் கல்லூரி அதிபர் திரு. க. சபா ஆனந்தர் இவ்வைபவத்திற்குத் தலைமை வகித்து கவிஞருக்கு மலர்மாலை சூட்டிப்பாராட்டுதெரிவித்தார். திரு. சு. பிரேமசம்பு வரவேற்புரை கூறினர்.

திரு. நா. முத்தையா மேலும் கூறியதாவது:—

"பாமர மக்களும் புரிந்து கொள்ளும் உணர்ச்சிமிகுந்த கவிதைகள் இயற்றும் பெருமையுடையவர். தமது ஓய்வு நேரம் முழுவதும் கவிதைத் தொண்டில் ஈடுபட்டு ஆத்மீக வாழ்க்கை நடத்தினர். இலங்கைக்கு கவிதைச் செல்வத்தை விட்டு உடல் நோயுடன் திரும்புகிருர். புலவர்களுக்குரிய சோதனைகள் இவருக்கும் வாழ்க்கையில் ஏற்பட்டன. இலங்கையின் தேசிய கீதத்தை யாத்த புலவருக்கு ஈழநாடு கடமைப்பட்டுள்ளது. இவரது பாடல்களைத் தொகுத்து வெளியிடுவதை எழுத்தாளர்சங்கம் மேற்கொள்ளுதல் சிறந்த நன்றிக்கடனுக இருக்கும்."

கவிஞர் ஸ்ரீபரமஹம்சதாசன் நன்றிதெரிவித்துப்பேசுகையில் கண்ணீர் வடித்தார். அவர் கூறியதாவது:—

"அன்பும் அருளும் தந்து என்னை கவிஞனுக்கிய பெருமை ஈழநாட்டிற்குரியது. இலங்கையின் இயற்கை எழிலும் சூழ்நிலைகளும் என்னை கவிஞனுக்கியது. வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவ உண்மைகள் எனது வாழ்க்கைக்கு வழிகாட்டியாக விளங்கின.

அன்பும் உணர்ச்சியும் இசையும்தான் கவிதைக்கு உயிர். எனக்குப் புதுவாழ்கைக் வழங்கியது கவிதைதான். ஏழைச் சிறுவனை இந்நாட்டிற்கு வந்த என்னைப்பாடவைத்தது. மனித வாழ்வு நிச்சயமற்றது, குறுகியகால வாழ்வில் மனிதவாழ்வின் இலட்சியம் ஈடேறவாழ வேண்டும். தூய வாழ்வை நாடிச் செல்வதே மனிதவாழ்வின் இலட்சியம். இறைவன் இன்பத்திற்கு அடுத்துகவிதை இன்பம் கவிதை இன்பத்தில் ஈடுபடும் அளவிற்குதுன்பத்தை மறக்க முடியும். எங்கிருந்தாலும் இறைவனையும் தமிழையும் மறக்கமுடியாது."

இக்கூட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நாவலப்பிட்டி மாவட்டத் தலைவர் திரு. கே. சுப்பையா,, இந்து வாலிபர்சங்க காரியதரிசி திரு. அ. சபாபதிப்பிள்ளை. இளம் எழுத்தாளர்சங்கப் பிரதிநிதி திரு. ப. ஆப்தீன் ஆகியோரும் பேசினர்.

# கல்வி வசதி இல்லாத 10,000 குழந்தைகள்

## எதிர்காலத்தில் மோசமான நிலையில் இருப்பார்கள்

கொழும்பு. ஞாயிறு

கல்வி வசதிகள் அளிக்கப்படாத காரணத்தால் 10,000 குழந்தைகள் சமுதாய முட்டுக்கட்டை உள்ளவர்களாக நாட்டில் இருப்பார்கள். இதை தடைசெய்யும் நோக்கத்துடன் சமூக சேவைப் பகுதியினர் பல்வேறுபட்ட ஸ்தாபனங்களை வருடா வருடம் நிறுவுவதில் பெருந்தொகையான பணத்தைச் செலவு செய்தபோதிலும் தொழிற் பயிற்சிகள் அளிக்கப்படாததால் நல்ல பயன் கிடைக்கவில்லையென சமூக சேவைப் பகுதியினர் அறிவிக்கின்றனர்.

"உருப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் இக்குழந்தைகள் தமது வாழ்க்கையில் பிச்சைக்காரர்களாகத்தான் வாழவேண்டி நேரிடும். அத்துடன் இவர்கள் அரசாங்கத்திற்குப் பாரமாகவும் இருப்பார்கள்" என்றும் சமூக சேவைப் பகுதியைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப்பிள்ளைகளுக்குத் தனிப் பாடசாலைகள் நிறுவப்படவேண்டும் என்றும் அவை குறிப்பாகத் தங்குவதற்கு வசதியான பாடசாலைகளாக அமையவேண்டுமெனவும் தேசிய கல்விக் கமிஷனிடம், சமூக சேவைப் பகுதி டைரக்டர் திரு. பி. உடுவல தெரிவித்துள்ளார்.

தாமாக முன்வந்து செய்யும் இயக்கங்களிடம் பணம் இல்லாமலிருக்குமாகையால் இவ்வேலையை அவர்களிடம் விட்டுவிடக் கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# விற்பனை வரி விரைவில் வசூலிக்கப்படும்

கொழும்பு, சனி

வர்த்தகர்களிடமிருந்து விற்பனை வரியை வசூலிப்பதற்கான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படுமென நேற்று வெளியான வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1962-ம் வருடம் ஜனவரியிலிருந்து இந்த வரி வசூலிக்கப்பட திட்டமிடப்பட்டிருந்ததாகவும் நிர்வாக ஒழுங்குகளில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இது பிற்போடப்படவேண்டி வந்ததென்றும் நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா தெரிவித்துள்ளார்.

ஒரு பொருளை மொத்த விற்பனையாளரிடருந்து பாவனையாளர் பெறுவதற்குள்ளான ஒரு கட்டத்தில் இந்த வரி விற்பனையாளரிடமிருந்து அறவிடப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய உணவுப் பண்டங்களுக்கும் அத்தியாவசிய பொருள்களுக்கும் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

## காஷ்மீர் பிரச்னை

ஜம்மு, மே 27

"காஷ்மீர் பிரச்னையை பாதுகாப்புச் சபையில் அடிக்கடி கிளப்புவதை சிலர் ஒரு நாகரிகமாகக் கொள்கின்றனர். ஆனல் காஷ்மீர்மக்கள் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை" என்று காஷ்மீர் பிரதமர் பக்ஷி குலாம் முகம்மது கூறினர்.

# இலங்கை வானொலியில் இரு முக்கிய பதவிகள்

## விண்ணப்பங்கள் கோரப்படும்

கொழும்பு, ஞாயிறு

இலங்கை வானொலியின் இரு முக்கிய பதவிகளுக்கான விண்ணப்பங்கள் சமீபத்தில் கோரப்படவிருக்கின்றன. தேசிய சேவை டைரக்டர் பதவி, வர்த்தகர்சேவை டைரக்டர் பதவி ஆகிய இரண்டுக்கும் விண்ணப்பங்கள் கோர கல்வி ஒலிபசப்பு மந்திரி திரு. பதியுதீன் முகம்மது தீர்மானித்திருக்கிறார். கடந்த ஒன்றரைவருடமாக இப் பதவிகள் காலியாய் இருக்கின்றன.

திரு. தேவிஸ் குருகே, திரு. விவி ஜெயமானே ஆகிய இருவரும் இப் பதவிகளில் தற்காலிக டைரக்டர்களாகக் கடமையாற்றினா. திரு. குருகே இப்போது தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்.

குறைந்த அளவு தகுதி, பட்டதாரியாய் இருக்க வேண்டுமென்ற ஒரே நிபந்தனைதான் மந்திரியின் கோரிக்கை. இலங்கை வானொலியின் செய்தி நிருபர் உட்பட சகல வேலைகளுக்கும் விண்ணப்பிப்பவர்கள் பட்டதாரிகளாய் இருக்கவேண்டுமென மந்திரி பார்லிமெண்டில் வற்புறுத்தினர்.

இதற்கிடையில் இலங்கை வானொலி அக்கவிண்டனை திரு. டபிள்யு. வியனகே இலாகாவிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டார். சிலகாலம் அவர் வைத்திய லீவில் இருந்தார். அவரது ஸ்தானத்திற்கு திரு. நாகலிங்கம் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

## தீரச் செயல்

கொழும்பு, ஞாயிறு

1958-ம் ஆண்டு கலகத்தில் தீரத்திற்காகப் பாராட்டு பெற்ற விசேஷ பொலிஸ்நிசர் வைச் சேர்ந்த திரு. பீ. நோர்பெட்பெரேரா மற்றொரு தீரச் செயல் புரிந்துள்ளார்.

தெஹிவளையில் கடமையாற்றிக் கொண்டிருந்த திரு. பெரேரா, வீடு ஒன்று இடிந்ததாகக் கேள்விப்பட்டு அங்கு விரைந்து, ஒரு பெண்ணையும் அவரது 3 பிள்ளைகளையும் உயிருடன் மீட்டார்.

## மணி வாக்கு

இயற்கையிலுள்ள பல வேகங்களில் ஆத்மசக்தியும் ஒரு வேகம். ஆத்மசக்தியை மறந்து விடுதல் பெருந் தவறாகும். நம்முடைய முன்னோர்கள் பலர் அதைக் கொண்டே தங்களுடைய வியாதிகளைத் தீர்த்துக் கொண்டிருக்கிறார்கள். உடலுக்கு வரும் நோய்களில் பல வற்றை வெற்றிகரமாகவே ஆத்மசக்தியைக் கொண்டு சொஸ்தப்படுத்திக் கொள்ள முடியும்.

— மகாத்மா காந்தி

ஈழநாடு
EELA NADU

EELA NAD'J: National Tami Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffnal Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு வைகாசி மீ 15 உ (28-5-62)

## பொலிஸ்

பொதுமக்களை பொலிசார் அடித்து இம்சை செய்வதாக பார்லிமெண்ட்டில் பாரதூரமான பல புகார்கள் கூறப்பட்டன. நிதிமந்திரி இதற்கு அளித்த பதிலில், சில "இடங்களிலே பொலிஸார் சர்வாதிகாரிகளாக நடந்து கொண்டிருப்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். இதைப் பற்றி நானே நேரில் விசாரிக்கின்றேன் என்று உறுதி கூறிவிட்டு, பொலிஸ் படையைச் சீர்திருத்தி அமைக்க வேண்டியது மிக அவசர வேலை என்றும், கமிஷன் விசாரிக்கும் வரை இவ்விஷயத்தில் காத்திருக்க முடியாதென்றும் கூறினார். இதுகுறித்து நிதிமந்திரி என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறாரென்பது தெரியவில்லை. என்றாலும் பொலிஸார் எதேச்சாதிகாரமாக நடந்து கொள்வதை அவர் பகிரங்கமாக ஒப்புக்கொண்டு நிலைமையைச்சீர்திருத்த உறுதி கூறியது வரவேற்கத்தக்கது.

யாழ்ப்பாண வீதிகளிலே சிறு சிறு குற்றங்கள் செய்பவர்களையும் பொலிசார் பகிரங்கமாக அடித்து இம்சை செய்வதாக சில நாட்களுக்கு முன் இப்பத்திரிகை மூலம் புகார் கூறப்பட்டது. குற்றம் செய்பவர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாமே தவிர, அவர்களை அடித்து இம்சிப்பதாயின் அது அக்கிரமமாகும்.

இங்குள்ள பொலிசாரில் பெரும்பாலோர் தமிழ் அறியாதவர்களென்றும் சொல்லப்படுகின்றது. தமிழ்மக்களே அதிகமாக வாழும் இப்பகுதிகளில் தமிழறியாத பொலிசாரை ஏன் நியமிக்கவேண்டும்? பொலிசார் பொதுமக்களின் நண்பர்களாக இருந்து சேவை செய்ய வேண்டியவர்கள், பொதுமக்களை இம்சை செய்து கொடுமைப் படுத்துவதாயின் அது சகிக்க முடியாததாகும்.

அடித்தவர்களை அடையாளம் காட்டினால்தான் அவர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடியுமென்று கூறுகிறார் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல். இதுவரை யாராலும் அடித்த எந்தப் பொலிஸ் அதிகாரியையும் அடையாளம் காட்ட முடியவில்லையாம்! பொலிசார் சட்டத்துக்கு மாறாகவோ தவறாகவோ நடக்கக்கூடாதென்றும் மிகச்சாதுர்யமாகவும், மரியாதையாகவும் தங்கள் கடமைகளை நிறைவேற்ற வேண்டுமென்றும் பொலிஸ் படையினருக்கு அவர் உபதேசம் செய்கிறார். இது எவ்வளவுதூரம் பயன்படுமோ யாமறியோம்.

பொலிஸ் படையை அவசரமாக திருத்தி அமைக்கப் போவதாக நிதிமந்திரி அறிவித்தார். அவர் எப்படி திருத்தப் போகிறாரென்பது தெரியவில்லை. பிரிட்டனிலே, பொலிஸ் பொறுப்புகள் 'கவுண்டி கவுன்ஸில்' என்ற ஸ்தலஸ்தாபனத்திடமே ஒப்புவிக்கப்பட்டுள்ளன. ஸ்தலஸ்தாபன அதிகாரத்தின் கீழ் பொலிஸ்படை இருப்பதால் அவர்கள் பொதுமக்களின் நண்பர்களாக இருந்து நல்ல சேவை செய்ய முடிகின்றது. அதே மாதிரி இலங்கையிலும் பொலிஸ் 'படைபற்றிய அதிகாரங்களை, பிரதேசசபைகளின் கையில் ஒப்புவிக்கும்போதே, பொலிசார் பொதுமக்களின் நட்பையும் அபிமானத்தையும் பெறும்வகையில் தங்கள் கடமைகளைச் செய்ய முற்படக்கூடும். ஆனால் இங்கு பிரதேச சபை எப்போது ஏற்படப் போகிறதென்பதோ, அப்படி ஏற்பட்டாலும் அதனிடம் பொலிஸ் அத்காரம் ஒப்புவிக்கப் படுமா என்பதும் தெரியவில்லை. அதற்கிடையே தமிழ் தெரிந்த பொலிஸ்காரர்களையே தமிழ்ப்பகுதியில் நியமிப்பதுடன், பொது மக்களை எவ்விதத்தும் இம்சை செய்யாமல் இருக்க வேண்டுமென்றும் பொலிசாருக்குக் கண்டிப்பாக உத்தரவிட வேண்டும்.

# ஒன்றுபட்ட இந்தியா

## வினோபாஜி கருத்து

இந்தியநாடு, பல சிறிய நாடுகள் ஒன்றுசேர்ந்த ஒரு பெரிய கூட்டு நாடு. இவ்வாறு பல்லாயிரம் ஆண்டுகளாக இது இருந்துவருகிறது. இதிலிருந்து இந்தியநாட்டவரின் பெரும் அறிவுத் திறன் வெளியாகிறது. எவ்வளவோ காலத்திற்கு முன்னாலிருந்தே இந் நாட்டின் பல பகுதிகளில் வாழ்ந்த மக்கள் இதை ஒரே நாடெனக் கருதிவந்திருக்கிறார்கள். இங்கே இதனாலேயே நன்கு வளர்ந்த மொழிகள் பல வழங்குகின்றன. ஐரோப்பாவிலும் மொழிகள் பல வழங்குகின்றன. எனினும், அது ஒரே நாடென்று கருதப்படுவதில்லை. இந்தியாதான் பல மொழிகள் இருந்தும், தன்னை ஒரேநாடென எண்ணுமாறு முதன் முதலில் செய்திருக்கிறது. இது இந்தியநாட்டின் தனிச்சிறப்பாகும். ஐரோப்பாவுக்குக்கூட இந்தச் சிறப்பு இன்னும் ஏற்படவில்லை.

### பெர்லின் பிரிவினையின் பேராபத்து

இப்போது ஐரோப்பா தனித்தனி நாடுகள் பலவற்றைக் கொண்டதாகவே இருக்கிறது. இவையெல்லாம் இந்தியாவின் பல மாநிலங்களைப் போல் ஒன்று சேரவேண்டும். சேர்ந்தால்தான் உலகில் அமைதி ஏற்படும், சமாதானம் நிலவும். ஆனால், ஐரோப்பிய நாடுகள் ஒரு கூட்டு அரசாங்கமாக இணைவது ஒருபுறமிருக்கட்டும் ஜெர்மனி என்ற ஐரோப்பாவின் ஒரு நாடே இன்று இரண்டாகக் கூறிடப்பட்டுக் கிடக்கிறது. அதில் அடங்கிய பெர்லின் நகரத்தையும் கூறிட்டிருக்கிறார்கள். இப்போது பெர்லின் நகரத்தின் ஒரு பகுதியில் உள்ளவர்களுக்கு மறு பகுதிக்குப் போக அனுமதி கிடையாது! இன்றைய நிலைமை இது. இதிலிருந்து தீமூண்டு அதனால் உலகமே எரிந்து அழிந்துபோகலாம். சண்டையிட்டோ, சமாதானமாகவோ இந்தப் பூசல்களுக்கு ஒரு முடிவு காணப்பட்டால் எல்லோருக்கும் புத்தி வரலாம். பிறகு பல மொழிகள் வழங்கும் ஐரோப்பிய நாடுகள் ஒன்றுசேர்ந்து இந்தியாவைப் போன்ற ஒரே தேசம் ஆகலாம். அப்போது இந்தியாவை வழிகாட்டியாக மதித்து ஐரோப்பியர் நடந்துகொள்வார்கள்.

### ஐரோப்பாவிலிருந்து கிடைக்கும் படிப்பினை

இன்றைய நிலையிலேயே இந்தியாவின் அரசியல் திறமை இங்கிலாந்தைவிட எவ்வளவோ உயர்ந்தது என்றுதான் சொல்லவேண்டும். இந்தியாவுடன் ஒப்பிடும்போது ஐரோப்பாவை மிகவும் பிற்பட்டது என்றே கருதவேண்டும். இப்போது அங்கே நிலவுவது மிகவும் பழைய, நாகரீகமில்லாத காலத்திய நிலைமை. இதனாலேயே ஒவ்வொரு மொழிக்கும் அங்கே தனித்தனி நாடு உள்ளது. இங்கோ ஒரு மொழியென்றால் அது வழங்கும் பகுதியை நாட்டின் ஒரு பிரதேசம் என்பதோடு நிறுத்திக் கொண்டோம் வெவ்வேறு மொழிகள் வழங்கும் இடங்களைத்தனி நாடுகளென்று கருதவேண்டுமென்று இங்கே எவரும் சொன்னதில்லை. ஒவ்வொருவரும் தம் மொழிக்கு தம் பிரதேசத்தில் முக்கியத்துவம் அளிக்கவேண்டும் என்றார்கள். இதற்காக சிறிது சண்டை சச்சரவு நடந்து, முடிந்தும் போய் விட்டது: இப்போது இந்தியா முழுவதும் எப்போதும்போல் ஒரே நாடு என்பது உறுதியாகி விட்டது. இவ்வாறின்றி ஐரோப்பாவில் போல் ஒவ்வொரு மொழி வழங்கும் பகுதியும் தனித்தனி நாடென்று கருதுமாயின் இங்கும் ஐரோப்பாவின் நிலைமையே இவுந்து வரும். அங்கே நடந்ததென்ன? ஒரு பெரும் போர் முடிந்தது இடையில் சிறிது காலம் அமைதி நிலவிற்று. அப்போது எல்லோரும் அடுத்த போருக்கு ஆயத்தம் செய்து கொண்டு மீண்டும் போரில் இறங்கி விட்டார்கள். கடந்த 400—500 ஆண்டுகளாக ஐரோப்பாவில் இப்படித்தான் நடந்து கொண்டிருக்கிறது. உலகின் போர்கள் பற்றிய புத்தகமொன்று படித்தேன். அதில் 2500 போர்களைப்பற்றி விவரிக்கப்பட்டிருந்தது. அவற்றுள் நாலைந்து போர்களே ஆசியாவில் நடந்திருக்க, மற்றவையெல்லாம் ஐரோப்பாவில் என்று தெரிய வருகிறது.

### ஓயாமல் சண்டை

ஒவ்வொரு நாடும் ஆயுதங்கள் தயாரிப்பதும், பிற நாட்டவரின் ஆயுதங்களை அழிக்க முயலுவதாக இருக்கிறது. இதனால் ஓயாமல் சண்டை நடந்துகொண்டு இருக்கிறது. இந்தச் சண்டைகள் எப்போது முடியுமோ சொல்ல முடியவில்லை. ஆனால் இந்தியா மட்டும் மிகவும் முன்னேற்றம் எய்தியதாய் இருப்பது மகிழ்ச்சியளிக்கும் விஷயமே. பல மொழிகள் வழங்கினாலும் இது ஒரே நாடாக இருந்துவருகிறது. இந்தியா அஹிம்சா முறையில் சுயராஜ்யமும் பெற்றிருக்கிறது. இங்கிலையில் கிராமதானத்தில் முன்னேறினால் இப்பொழுதைய சிக்கல்கள், சிரமங்கள் அனைத்தையும் அஹிம்சா ரீதியாக எப்படிப் போக்குவது என்பதை உலகிற்கு எடுத்துக்காட்டமுடியும்.

### வேறுபாடு இல்லை

கிராம ராஜ்யம், கிராமத்தின் அமைதி, நாட்டின் ஆட்சி, நாட்டின் அமைதி, உலக ராஜ்யம், உலக அமைதி என்ற இவைகளிடையே வேறுபாடு எதுவும் இல்லை. உருவத்தில் வேறு பாடே தவிர தன்மையில் வேபாடு கிடையாது. ஒன்று பெரியது; இன்னொன்று சிறியது; அவ்வளவுதான் வேற்றுமை. ஒரு கிண்ணத்திலுள்ள பாலுக்கும் ஒரு குடம் பாலுக்கும் என்ன வித்தியாசம்? வித்தியாசமெல்லாம் அளவில் தான். ஒன்று குறைவு; இன்னொன்று அதிகம். இதைத் தவிர, இரண்டிலும் இருப்பது ஒரே பால் தானே? ஒவ்வொரு கிராமத்திலும் விவசாயத்திற்கும் கல்விக்கும் ஆரோக்கியப் பாதுகாப்பிற்கும் மக்களுக்கு புஷ்டியான உணவுக்கு ஏற்பாடு செய்வதற்கும் தனித்தனி இலாகாக்கள் இருக்கவேண்டும். எல்லா கிராமங்களிலும் அமைதி நிலவவேண்டும்.

### கிராமந்தோறும் அமைதி இருந்தால்?

மாதவ தேவர், 'நான் இந்த மண்ணில், எவ்வளவு புண்ணியம்செய்து பிறந்திருக்கிறேன்!' என்று பாடியிருக்கிறார் இதில் அந்த மகானின் நெடுநோக்கு நமக்குப் புலனாகிறது அவர் தம் பிரதேசமான அஸ்ஸாமைப் பற்றிச் சொல்லவே இல்லை. பாரதமென்றும் பூமியென்றும் சொன்னாலே அதில் அஸ்ஸாமும் அடங்கித்தானே போகிறது என்பது அவர் எண்ணம். நான், 'ஜெய்ஜகத்' என்கிறேன். சங்கராச்சாரியாரோ 'மூன்று லோகமும் என் சொந்த நாடு' என்றார். இந்திய நாட்டுப் பெரியோர் நமக்கு எவ்வளவு உயர்ந்த, பரந்த கருத்தை அளித்திருக்கிறார்கள்! 'ஒரு கிராமம் என்றால், அது அகில உலகையும் சிற்றுருவில் காட்டுவது' என்று வேதம் சொல்லுகிறது. அகில உலகிற்கும் பிரதிநிதியாம். ஒவ்வொரு கிராமமும் 'அந்த கிராமம் ஒவ்வொன்றும் திருப்தியாய் புஷ்டியாய் இருக்குமானால் உலகெங்கும் அமைதி நிலவவே செய்யும், என்கிறது, வேதம். ஒரு முக்கோணத்தின் மூன்று கோணங்களையும் கூட்டினால் இரண்டு சமகோணமாகும் என்பது சூத்திரம். இந்தச் சூத்திரம் பெரிய முக்கோணத்திற்கு எவ்வாறு பொருந்துமோ அவ்வாறே சிறியதற்கும் பொருந்துவது தானே? இதே போல கிராமந்தோறும் அமைதிக்கு ஏற்பாடு செய்துவிட்டால் உலக அமைதி தானே ஏற்பட்டுவிடும். அதற்குத் தனி முயற்சி தேவையில்லை.

---

## நந்திச் செலவு திருப்பி அனுப்பப்பட்டது

மன்னார், ஞாயிறு

இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட ஒரு தந்தி விநியோகிக்கப்படவில்லை எனஒருவர் புகார் கூறியதைத்தொடர்ந்து, போஸ்டபீஸ் டிவிஷன் சுப்பிறீண்டனிடமிருந்து அவருக்கு ஒரு கடிதம் கிடைத்தது. அந்த தந்தி காணமற் போய்விட்டதால் அது விநியோகிக்கப் படவில்லை என மன்னிப்புக் கோரப்பட்டிருந்ததுடன் தந்திப் பணமும் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.

## ஐயாறன் எழுதுவது

நேற்று ஓர் அமெரிக்க அன்பர் வந்தார். உயரம் 6 அடி 3 அங்குலம். அவருடன் நின்று பேசுவதற்கே கூச்சமாக இருந்தது. நம்மைவிட உயரமானவர்களுடன் நாம் நின்று பேசும் போது, நாம் சின்னவர்களாகி விடுகிறோம். நாம் அண்ணார்ந்து பார்த்து பேச வேண்டியுள்ளது. அவர்களோ நம்மை கீழ்நோக்கி அலட்சியமாகப் பார்க்கிறார்கள். ஆகவே கூடுமானவரை அப்படிப்பட்டவர்களுடன் சேர்ந்து நின்று பேசுவதைவிட்டு, உட்கார்ந்து பேசுவதே உசிதமாகுமல்லவா?

பாரதப் பிரதமர் நேருஜியின் உயரம் சுமார் 5 அடி 2 அங்குலம் தான். நெட்டையானவர்களுடன் அவர் நிற்கும்போது ஒரு மாதிரியாகத் தான் இருக்கும். சிலபோட்டோ படங்களைப் பார்த்திருக்கிறேன். நேருஜிமிகச் சின்னவராகவும் மற்றவர் மிகஉயர்ந்தவராகவுமிருக்கும். அப்பேர்ப்பட்ட படங்களைப் பிடித்துவெளியிட ஏன்அனுமதிக்க வேண்டுமென்றுகூடத் தோன்றும்.

* * *

அமெரிக்கரில் அநேகமாக எல்லோருமே நெட்டையாக இருக்கிறார்களே அதன் ரகசியமென்ன? நெட்டையானவர்கள் மட்டுமே வேலை என்றும், வெளிநாடுகளுக்கு அவர்களே செல்லலாமென்றும் அமெரிக்காவில் உத்தரவு போட்டிருக்கிறார்களா? இதைப் பற்றி அந்த அமெரிக்க அன்பரைக் கேட்டேன்.

சிலவருடங்களுக்கு முன்பாக அமெரிக்கரின் உயரம் 5 அடி 7 அங்குலமாக இருந்ததென்றும், இப்போது இந்த உயரம் 5 அடி 9 1/2 அங்குலத்துக்கு உயர்ந்துவிட்டதாயும் இதற்குக் காரணம் அவர்கள் பசும்பால் அதிகம் சாப்பிடுவதாகத்தான்என்றும்சொல்லி, தாம் தினசரி ஒன்றரைப் போத்தல்பால் சாப்பிடுவதாகத் தெரிவித்தார் அவர்.

இதைக் கேட்டதும் இரவில் சற்றே அதிமான பசும்பால் சாப்பிட்டேன், என்ன ஆயிற்று தெரியுமா? இரண்டு 'இன்சு' உயரம் அதிகமாகி விட்டதாக நினைக்கிறீர்களா? இல்லை, இல்லை அஜீர்ணமும் தலைவலியும் வந்துவிட்டது! உடன் பாலை வழக்கம்போல் குறைத்து விட்டேன்!

* * *

நெட்டையாக இருப்பவர்களைப் பார்த்து நம்மில் சிலர் பொறாமைப் படுகிறோமல்லவா! ஆனால் அந்த அமெரிக்க அன்பர் என்ன சொன்னார் தெரியுமா! தாம் நெட்டையாக இருப்பதால், காரிலே காலை நீட்டி சுகமாக உட்கார முடியவில்லை என்றும் அதனால் முன் ஆசனத்தில் இருக்க வேண்டியிருப்பதாயும், தமக்குத் தகுந்த ரெடிமேட் உடை கடையில் கிடைப்பது பஞ்சியாக இருப்பதாயும், நீட்டிபபடுக்க வசதியான கட்டிலும் கிடைப்பது கஷ்டமென்றும் கூறினார். வாசலில் நுழையும் போது, தலை இடித்துவிடலாம். மிக கவனமாக இருக்கவேண்டும். இதை எல்லாம் பார்த்ததும், நாம் இருக்கும் உயரமே போதுமென்ற திருப்தி ஏற்பட்டது!

* * *

தேவக்கோட்டையிலே திருக்குறள் விழாப் பேச்சுப்போட்டி, குன்றக்குடி அடிகளாருக்கும், சென்னை சட்டசபை எதிர்க்கட்சித்தலைவர் நெடுஞ்செழியனுக்கும் நடந்ததாம். 'வள்ளுவத்தின் வாழ்க்கை முறையை வளர்க்கும் பொறுப்பு தனிமனிதனுக்கா, சமுதாயத்துக்கா?' என்பது பற்றி பேச்சுப்போட்டி. பொறுப்பு சமுதாயத்துக்கு என்று வாதித்தாராம் நெடுஞ்செழியன். தனிமனிதனுக்கு

(8-ம் பக்கம் பார்க்க)

# ஏழையாக இருப்பது ஒரு குற்றமா?

## தங்கக் கட்டி வழக்கில் திரு. ஜி.ஜியின் தொகுப்புரை

யாழ்ப்பாணம், திங்கள்

**"இந்த அரசாங்கத்தின்கீழ் ஏழையாக இருப்பதுவும் ஒரு குற்றமா?" என்று வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ. ஸி. ஒரு வழக்கில் தொகுப்புரை நிகழ்த்துகையில் கேட்டார்.**

1958-ம் ஆண்டில் தங்கள் வீட்டிலிருந்து 80,000 ரூபாய் பெறுமதியான எட்டுத் தங்கக் கட்டிகளைச் சுங்க இலாகாவினரும் பொலிசாரும் கைப்பற்றினரென்றும் அவற்றைத் தங்களிடம் திருப்பித் தரவேண்டுமென்றும் கோரி கரையூரைச் சேர்ந்த ஐ. ஞானப்பிரகாசம் அவரது மனைவி கிரேஸ் ஞானப்பிரகாசம் ஆகியோர் தொடர்ந்திருந்த வழக்கு விசாரணை மாவட்ட உதவி நீதிபதி திரு. ஸி. தனபாலசிங்கம் முன்னிலையில் நடைபெற்று முடிவடைந்தது. இவ்வழக்கில் வழக்காளிகள் தரப்பில் ஆஜரான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் சனிக்கிழமை தொகுப்புரை நிகழ்த்தினர்.

உதவி சொலிசிட்டி ஜெனரல் திரு கிறிஸ்டி அலஸ் நேற்று தொகுப்புரை நிகழ்த்துகையில் கைப்பற்றப்பட்ட எட்டு தங்கப்பவுண் கட்டிகள் தங்களுடையவைதான் என்பதை வழக்காளிகள் நிரூபிக்க வேண்டுமென்றும் தங்கக் கட்டிகள் இறக்குமதி செய்யப்பட்டவையென்பதை முடிக்குரிய பகுதியினர் நிரூபிக்கவேண்டுமென்றும் கூறினர். "இவ்வளவு பெறுமதி வாய்ந்த தங்கக் கட்டிகளுக்குச் சொந்தக்காரராக இருப்பதற்கு இவர் தகுதி வாய்ந்தவரா என்பதுதான் நீதிமன்றம் கவனிக்கவேண்டியது. இதற்கு ஆதாரமாகக் கிராம விதானையாரின் சாட்சியத்தையும் அரசாங்க அதிபர் முதலில் நடத்திய பூர்வாங்க விசாரணையின்போது இவரது மனைவியளித்த சாட்சியத்தையும் நீதிமன்றம் கவனிக்க வேண்டும்" என்று திரு. அலஸ் கூறினர்.

"கிராமத்திலுள்ளவர்களை நன்கு அறிந்த கிராம விதானையார் இவரது சொத்து 250 ரூபாய்க்கு மேலல்லவென்பதையும் இதைவிட பெறுமதியான பொருள் வேறு இல்லையென்றும் கூறியிருக்கிருர். ஞானப்பிரகாசத்தின் மனைவி கிரேஸ் திரு. ஸ்ரீகாந்தா முன்னிலையில் கொடுதத சாட்சியத்தில் தன்னிடத்தில் தன்னிடம் தனது ஒரு ஜோடி தோடுதவிர வேறு நகையில்லையென்றும் நகைகள் யாவும் கணவனால் அடைவு வைக்கப்பட்டு விற்பனையாகிவிட்டதென்றும் தெரிவித்திருக்கிருர். ஞானப்பிரகாசத்தின் குடும்பமோ பெரிது குடும்பத்தை நடத்துவதற்குப் போதிய வருமானம் இல்லை. இந்த நிலையிலுள்ள ஞானப்பிரகாசத்திடம் 80,000 ரூபாய் பெறுமதியான தங்கப்பவுண் இருக்க முடியுமா என்பதைக் கோர்ட்டார் கவனிக்கவேண்டும். இவர் கள்ளப் பொருள்களைக் கடத்தக்கூடியவர் என்பதற்குப் போதிய சான்றுகள் உண்டு. இவர் இராணுவத்திலிருந்து வெளியேறியவர். பல இடங்களும் தெரிந்தவர். இந்தியாவுக்கும் பலமுறை சென்று வந்தவர். இவர் நடராஜா ஆச்சாரி என்பவருடன் தொடர்பு வைத்துள்ளவரென்பதற்கு கடிதங்கள் ஆதாரமாக இருக்கின்றன. இவர் இந்த பவுணுக்குச் சொந்தக்காரராயிருக்க முடியுமென்பதற்குச் சாட்சியமெதுவும் இல்லை. எனவே இந்தப் பவுண் கடத்தப்பட்டவை என்பதற்கு ஐயமில்லை" என்று திரு. அலஸ் கூறி முடித்தார்.

அடுத்து வழக்காளி ஞானப்பிரகாசம் அவரது மனைவி கிரேஸ் ஞானப்பிரகாசம் ஆகியோரின் சார்பில் ஆஜரான சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ. ஸி. தமது தொகுப்புரையை நிகழ்த்தினர். திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தொகுப்புரையில் கூறியதாவது:-

அப்பொழுது அரசாங்க அதிபராகவிருந்த திரு. எம். ஸ்ரீகாந்தாவும் உதவி அரசாங்க அதிபராகவிருந்த திரு. டபிள்யு. பத்மநாதனும் நடத்திய பூர்வாங்க விசாரணையின்போது இந்தத் தங்கப்பவுண் கடத்தப்பட்டதாகவோ தீர்வை கொடுக்கவேண்டிய பொருள்களின் ஒன்ருகவோ நிரூபிக்கப்படவில்லை. அப்படியான முறையிலுள்ள பொருள்கள் என்பதை நிரூபிக்கக்கூடியவகையில் விசாரணை நடத்தப்படவும் இல்லை. சுங்க பாதுகாப்பு உதவி அதிகாரி செல்வரத்தினம் இந்தத் தங்கக் கட்டிகள் கடத்தப்பட்டவை என்று சந்தேகப்பட்டதால் கடத்தப்பட்ட தங்கக் கட்டிகள் என்று திரு. ஸ்ரீகாந்தா தீர்ப்புக் கூறி அவற்றைப் பறிமுதல் செய்தனர். கடத்தப்பட்ட தங்கம் தான் என்பதற்கு ஒரு விதமான அறிகுறியும் எவருடைய சாட்சியத்திலும் இருக்கவில்லை.

இது ஒருபுறமிருக்க தங்கப் பவுண், கஞ்சா, அபின் போலவோ அல்லது சாராயம் வைத்திருக்க அனுமதியளிக்கும் குறிக்கப்பட்ட அளவுதான் வைத்திருக்கலாமென்பதுபோல் பவுணுக்குக் கிடையாது. எவ்வளவு பெறுமதியான தங்கப் பவுணையும் எந்த ஏழையாவது அல்லது பணக்காரனுவது அவர் எவராகவிருந்தாலும் வைத்துக்கொள்ளலாம். இதுவரையில் எந்த அரசாங்கமாவது இதற்குத் தடைவிதிக்கவில்லை.

இந்த அரசாங்கத்தின் கீழ் ஏழையாகவிருப்பது ஒரு குற்றமா? ஒரு மனிதனின் அடிப்படை உரிமையை இந்த சுங்க இலாகாவினர் பறிமுதலாக்கி ஒருவரை நஷ்டப்படுத்தி தாம் வெகுமதி பெறுவதற்காக உள்ள முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அரசாங்கத்தின சட்டப்படி தங்கப் பவுண் மத்திய வங்கி மூலமாக இறக்குமதி செய்யப்படவேண்டுமென்று உள்ளதேயொழிய யார் எவ்வளவு வைத்திருக்கவேண்டும் எவ்வளவு வைத்திருக்கக்கூடாதென்று சட்டம் எதுவும் இல்லை.

இந்தத் தங்கப் பவுண் வைத்திருப்பதற்கு ஞானப்பிரகாசம் பெறுமதியற்றவர் என்பதைக் காண்பதற்கும் இவர் 250 ரூபாய்க்கு மேல் பெறுமதியற்றவர் என்பதைக் காண்பதற்கும் விதானையார் ஏதாவது மர்மமான அளவுகோல் வைத்திருக்கிருரா? அவர் சாட்சியமளித்த பின் "கிராமத்திலுள்ளவர்களின் பெறுமதியை அறிவதற்கு பதிவுகள் ஏதாவது வைத்திருக்கிறீரா?" என்று நான் கேட்டதற்கு "அப்படி ஒன்றும் இல்லை" என்று பதிலளித்தார். எவ்வளவுக்கு அவருடைய சாட்சியத்தை நம்பலாமென்பதை கோர்ட்டார் கவனித்துக்கொள்ள வேண்டும். வெளிநாட்டிலிருந்து கடத்தப்பட்ட தங்கம் என்பதை நிரூபிப்பதற்கு இவர்கள் எவ்வித ஆதாரமும் வைத்திருக்கவில்லை.

பிரான்ஸ் தேசத்தில் கம்பெனியினல் இந்தத் தங்கக் கட்டிகள் உருவாக்கப்பட்டனவென்பதை நிரூபிப்பதற்காக நிபுணர் என்று சொல்லப்பட்ட ஒருவரை வருவித்திருந்தார்கள். அவருடைய சாட்சியம் நிபுணத்துவ சாட்சியமல்லவென்றும் தமது அனுபவத்தைக்கொண்டும் ஏனைய வழிகளால் அறிந்தவற்றையும் சொல்வதற்காக அவர் கூறியிருந்தார்.

கேள்விஞானம் நிபுணத்துவமல்ல.

எதிரி தரப்பிலுள்ள சுங்க இலாகாவினர்தான் ஞானப்பிரகாசத்துக்கு இந்த தங்கம் சொந்தமல்ல என்பதைத் தெளிவாக நிரூபிக்கவேண்டும். எந்த நியாயத்தைக்கொண்டு தங்கத்தைப் பறிமுதல் செய்தனரென்பதையும் தெளிவாக எடுத்துக்காட்டவேண்டும்.

இந்தத் தங்கம் பறிமுதல் செய்தது சுங்க இலாகாவினர் தாங்கள் வெகுமதிபெறுவதற்காகவென்பது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது.

வழக்கறிஞர்களின் தொகுப்புரை முடிவடைந்ததும் தீர்ப்புக் கூறுவதை ஜூலை 13-ந் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

# வலது குறைந்த பிள்ளைகளும் நமது பிள்ளைகளே!

## கைதடி குருடர் செவிடர் பாடசாலையில் உதவிவித்தியாதிபதி

யாழ்ப்பாணம், திங்கள்

"வலது குறைந்தவர்களுக்கு நாங்கள் ஏதோ தொண்டு செய்கிறதாக நாங்கள் கருதக்கூடாது. அவர்களும் நாங்கள் விசேஷமாகத் தொண்டு செய்வதாகக்கருத இடம் கொடுக்கக்கூடாது. அவர்களும் எங்களில் ஒருவராக சமுகத்தில் வாழ்ந்து சமூகத்துக்கு சேவை செய்யக்கூடியதாக இருக்க வேண்டும். தாங்கள் வலது குறைந்தவர்கள் என்று அவர்கள் மனதில் வேதனைப்படுவதற்கு நாங்கள் இடம் கொடுக்கக்கூடாது" என்று ரோட்டரிச்சங்க யாழ்ப்பாணக் கிளைத் தலைவர் திரு. வி. சத்தியநாதன், கைதடியிலுள்ள குருடர் செவிடர் பாடசாலைக்கு ரோட்டரிச் சங்கத்திஞல் வழங்கப்பட்ட, ஆயிரத்தைந்நூறு ரூபாய் பெறுமதியான சமயற் பாத்திரங்கள், ரேடியோ மற்றும் தளபாடங்களைக்கையளித்தலொரு வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. சத்தியநாதன் மேலும் பேசுகையில் இப்பாடசாலை மிகவும் கஷ்டமான நிலையில் இயங்கிவருகிறதென்பதையறிந்த ரோட்டரிச் சங்கம் இயன்றவரையில் அவர்களுக்கு உதவிபுரிய முன்வந்திருக்கிறதென்றும் இன்னும் இரண்டொரு மாதங்களுக்குள் பாடசாலை உபகரணங்களாக பல பொருள்களை அளிக்கவிருப்பதாகவும் தெரிவித்தார்.

உதவி வித்தியாதிபதி திரு எஸ். யூ. சோமசேகரம் பேசுகையில் தென் பகுதியிலுள்ள மக்கள் வலதுகுறைந்த பிள்ளைகளுக்கு போதிய வசதிகளைக் கொடுத்து அவர்களை முன்னேற்ற ஆர்வம் கொண்டுள்ளனரென்பதற்கு கல்கிசை குருடர் செவிடர் பாடசாலை நன்கு இயங்குவது சான்ருகுமென்ருர். வடபகுதியிலுள்ள மக்கள் இந்தப் பிள்ளைகளும் தமது பிள்ளைகள்தானென்பதைஉணரவில்லையென்றும் இந்தப் பிள்ளைகளுக்கு கல்வியூட்டுவதற்கு விசேஷ பயிற்சி பெற்றவர்களைவிட ஏனையோரால் முடியாதது என்றும் மனிதாபிமானத்துடன் உள்ளவர்கள்தான் இதைச் செய்யமுடியுமென்று கூறினர்.

"குறிப்பிட்ட பிள்ளைகளின் தொகைக்கேற்ப அரசாங்கம் ஆசிரியர்கள் நியமிக்கும் இந்தப் பாடசாலைக்கும் அந்த முறைப்படிதான் ஆசிரியர்களை அரசாங்கம் நியமித்துள்ளது. ஆனல் அது போதாது. இங்கு ஆசிரியர்கள் அந்தத் தொகைக்கு அதிகமாகவே நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு சம்பளம்கொடுப்பதற்கு பொதுமக்களின் நிதிஉதவியைத்தான் எதிர்பார்த்திருக்க வேண்டும்" என்று திரு. சோமசேகரம் கூறினர்.

---

# மாட்டுவண்டி சவாரிப் போட்டி

## ஜூன் மாதம் 10-ந் திகதி நடைபெறும்

யாழ்ப்பாணம், திங்கள்

தேசிய விளையாட்டு விழாச் சபையினரால் நடத்தப்படும் தேசிய விளையாட்டுக்களில் ஒரு அம்சமான மாட்டுவண்டி சவாரிப் போட்டியொன்று ஜுனின் மாதம் 10-ந் திகதி பிற்பகல் யாழ்ப்பாணம் பொலிஸ் மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

இப்போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு வெற்றிக் கிண்ணமும் பரிசுகளும் வழங்கப்படவிருக்கின்றன.

இப்போட்டியில் கலந்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் காங்கேசன்துறை உதவி பொலிஸ் சுப்ரின்டெண்ட் திரு. ஏ. எஸ். மரியநாயகத்திடம் அல்லது ஸ்கந்தவரோதயக் கல்லூரியைச் சேர்ந்த திரு. தியாகராஜாவிடம் பிரவேசப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாமென்றும், பிரவேசக்கட்டணமாக 5 ரூபாய் செலுத்தவேண்டுமென்றும் அறிவிக்கப்படுகிறது.

# இ. போ. சபை பஸ் மோதி ஒருவர் மரணம்

## சாரதியை கைது செய்ய வாரண்ட்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் மெயின்வீதி-ஆரும் குறுக்குத்தெருச் சந்தியில் சி. பி. சவரிமுத்து (56 வயது) என்பவர் இம்மாதம் 21-ந் திகதி காலை இ. போ. சபை பஸ் ஒன்றிஞல் மோதப்பட்டு இம்மாதம் 25-ம் திகதி மரணமானுர். இவரது மரணம் சம்பந்தமாக திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் விசாரணை நடத்திஞர்.

விசாரணையின்போது குறிப்பிட்ட பஸ்வண்டியின் சாரதியான கந்தையா பொன்னுத்துரை சாட்சியமளிக்க வராததால் அவரைக் கைதுசெய்து இன்று திங்கட்கிழமை வரை ரிமாண்டில் வைக்க மரண விசாரணை அதிகாரி உத்தரவு பிறப்பித்தார்.

விசாரணையின்போது பஸ் கண்டக்டர் கணபதிப்பிள்ளை சின்னையா சாட்சியமளிக்கையில் பஸ் கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்ததென்றும் மணிக்கு 15 அல்லது 20 மைல் வேகத்தில் வந்துகொண்டிருந்ததென்றும் கன்னியாஸ்திரி பாடசாலைக்குச் சமீபத்தில் ஆரும் குறுக்குத்தெரு சந்தியடியில் நடுவீதியில் காலஞ்சென்றவர் சைக்கிளில் வந்துகொண்டிருந்தாரென்றும் பஸ்ஸைக் கண்டதும் பதட்டமடைந்தாரென்றும் சாரதி 'பிறேக்' போடுமுன் அவர்மீது பஸ் மோதிவிட்டதென்றும் இறங்கிப் பார்த்தபொழுது அவர் முன் சக்கரத்துக்குப் பின்ஞல் பஸ் வண்டிக்குக்கீழே கிடந்தாரென்றும் உடனே சாரதி ஒரு வாடகைக் காரில் அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்ருரென்றும் கூறினர்.

மேசன் ஏ. டி. அப்புத்துரை சாட்சியமளிக்கையில் காலஞ்சென்றவர் மெயின் வீதியில் புதிதாக வீடு ஒன்று கட்டி வந்தாரென்றும் அங்கிருந்து சவரிமுத்து புறப்பட்ட சில விஞடிகளுக்குள் 'ஐயோ யேசுநாதரே' என்ற சத்தம் கேட்டதென்றும் கூறினர்.

சட்டவைத்திய அதிகாரி டாக்டர் வைத்திலிங்கம் பிரேத பரிசோதனைநடத்தியபின் காயங்களால் ஏற்பட்ட இரத்தப்பெருக்கும், அதிர்ச்சியும்தான் மரணத்துக்குக் காரணம் எனத் தெரிவித்தார்.

---

கொழும்பு, ஞாயிறு

ரயில் சேவை இருக்கும் இடங்களில் இ. போ. ச. எக்ஸ்பிறஸ் போக்குவரத்து ஒழிக்கப் படவேண்டும் அல்லது கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்ற யோசனை இலங்கை போக்குவரத்து சபையின் ஆலோசனைக் கமிட்டி முன் இருக்கிறது. பஸ், ரயில் இரண்டும் நீடிப்பது அனுவசியமும், சிக்கனத்துக்கு மாருனது என சில அங்கத்தினர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். ரயில்வே, அதிகமான எக்ஸ்பிரஸ் வண்டிகளை விட வேண்டும் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.


## 'ஈழநாடு' கொழும்புக் கிளை

கொழும்பில் 'ஈழநாடு' பத்திரிகையின் விநியோகம் பற்றித் தகவல் பெறவிரும்பும் வாசகர்களும் ஏஜண்டுகளும் கீழ்க்காணும் விலாசத்திலிருக்கும் எமது கிளைக்காரியாலயத்துடன் தொடர்பேற்படுத்திக் கொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.

நிர்வாகி
'ஈழநாடு' (கொழும்பு)
சரஸ்வதி மண்டபம்,
லோறன்ஸ் வீதி,
கொழும்பு 4.

The Manager,
'EELANADU' (Colombo)
Saraswathy Hall,
Lorensz Road,
Colombo 4.

Phone : 81975

# மட்டக்களப்பு மாவட்டத்திற்கு புதிய பஸ்களை அனுப்பவும்

## இ. போ. சபை ஊழியர்கள் பகிரங்க வேண்டுகோள்

மட்டக்களப்பு, சனி
மட்டக்களப்பு மாவட்டத்திற்குப் புதிய பஸ்களை அனுப்பி வைக்கும்படி இலங்கைப் போக்குவரத்துச்சபை மட்டக்களப்பு டிப்போ ஊழியர்கள், அரசாங்கத்திற்கு ஓர் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பஸ் போக்குவரத்து தேசியமயமாக்கப்பட்ட காலம் முதல் இன்றுவரை இப் பகுதி மக்கள் போக்குவரத்துத்துறையில் பெருங் கஷ்டம் அனுபவித்துவருகின்றனர். இதுவரை மட்டக்களப்புப்பகுதிக்கு புதிய பஸ்கள் எதுவும் அனுப்பப்படவில்லை எனத் தெரிகிறது. பழுதடைந்த பஸ்களை ஓட்டுவதினல், இ.போ.ச. வினைச் சேர்நத ஒன்பது ஊழியர்கள் உடன்நலமிழந்து காசநோயினல் துன்புற்றுவருகின்றனராம். உபயோகத்துக்கு உதவாத பஸ்களைச் செலுத்துவதில் பஸ் சாரதிகள், பஸ் வண்டிகளோடு போராட்டம் நடத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாம்.

ஆரம்பத்தில் மட்டக்களப்பு டிப்போவில் நாளொன்றுக்கு 46 பஸ்கள் ஓடின இன்று 27 பஸ்வண்டிகளே ஓடக்கூடிய நிலையில் உள்ளன. எனத் தெரிகிறது. இந்த 27 பஸ்களில் ஒன்றேனும் நல்ல நிலையில் இல்லை.

இந்நிலையில்தான் இன்று மட்டக்களப்பில் இ. போ. ச. வின் பஸ்சேவை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இன்னும் சில மாதங்களில், ஓடுவதற்கு பஸ்களின்றி பஸ் சேவையே ஸ்தம்பித்துவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை."

மேலும் தாமதிக்காமல் மட்டக்களப்புப் பகுதிக்கு புதிய பஸ்களை அனுப்பிவைக்கும்படி, இலங்கை மேட்டார் தொழிலாளர் சங்க மட்டக்களப்புக் கிளையும், அகில இலங்கை ஐக்கிய மோட்டார் தொழிலாளர் சங்க மட்டக்களப்புக் கிளையும், கூட்டாக வெளியிட்டுள்ள ஓர் பகிரங்க அறிக்கையின் மூலம் அரசாங்கத்தைக் கேட்டுள்ளன

லாவோஸ்

# ஜூன் மத்திக்குள் கலப்பு அரசாங்கம்

## இல்லையேல் பூமா திரும்பி விடுவார்

வியன்டைன், மே 27
லாவோசின் நடுநிலைமைத் தலைவர் இளவரசர் சுவன்ன பூமா லாவோஸ் மன்னர் சவன்னவத்தனவைச் சந்திப்பதற்கு அனுமதி கோரியுள்ளார்.

மன்னரைச் சந்தித்துப் பேசியபின் இடது சாரி வலது சாரித் தலைவர்களையும் சந்தித்து லாவோசில் கலப்பு அரசாங்கம் அமைப்பது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்துவார்.

ஜூன் மாத மத்திக்குள் கலப்பு அரசாங்கம் அமைக்தப்பட முடியாது போனல் தாம் பாரிசுக்குத் திரும்பிச் செல்லப் போவதாக இளவரசர் சுவன்ன பூமா தெரிவித்தார்.

தாய்லாந்தில் 'சியாட்டோ' படைகள் எவ்வளவு காலமிருக்கும் என்பது பற்றி இப்பொழுது கூறமுடியாது என்று தாய்லாந்துப் பிரதமர் தெரிவித்தார்.

# மது என்று நினைத்து நச்சு மருந்தைக் குடித்தாராம்!

தெல்லிப்பழை, ஞாயிறு
சுளிபுரத்தை சேர்ந்த சின்னையா பொன்னுத்துரை என்பவர் நஞ்சுமருந்து குடித்துத் தற்கொலை செய்துகொள்ள முயன்றதாக சங்கானைப்பொலிசாரால் குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி. டி. தாமோதரம் முன்னிலையில் குற்றஞ்சாட்டித் தாக்கல்செய்த வழக்கு விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி டாக்டர் திரு. சிவகுருநாதன் சாட்சியமளித்தார்.

பொன்னுத்துரையின் மனைவியான மகேஸ்வரியை சாட்சியமளிக்க பொலிசார் அழைத்தபோது எதிரி தரப்பில் ஆஜரான திரு. ஆர். ஜே. செல்வரத்தினம், 'கணவனுக்கு எதிரான வழக்கில் மனைவி சாட்சியமளிப்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது. ஆனல், கணவன் மனைவிக்கு குற்றஞ்செய்த வழக்கில் மனைவி சாட்சியமளிக்கலாம் என்று நீதிபதியிடம் கூறினர். நீதிபதி இதனை ஏற்றுக்கொண்டார். எதிரி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

'சம்பவம் நடைபெற்ற தினத்தன்று நான் பூநகரியில் இருந்து வீட்டுக்கு வந்தேன். வீட்டில் சாப்பிட்டபின் வயிற்றில் கோளாறு ஏற்பட்டது. எனவே கொஞ்சம் சாராயம் குடிப்பதற்காக அலுமாரியைத்திறந்தேன். அலுமாரியில் சாராயம், சோடா, மையெண்ணை (டேப் அன்ரைன்) என்பன இருந்தன. சாராயம் என நினைத்து மை எண்ணையைக் குடித்தேன். குடித்து முடிந்ததும் வாந்திஎடுத்து அறிவுமயங்கி வீழ்ந்தேன். பின்னர் நடந்தவை எனக்குத் தெரியாது. எனக்கு உயிரை மாய்த்துக்கொள்ளும் எண்ணம் சிறிதுமிருக்கவில்லை. மனைவி, குழந்தைகளுடன் சந்தோஷமாகவே வாழ்க்கை நடத்துகிறேன்!

நீதிபதி எதிரியிடம் குடிப்பதனை இனிகவனித்துக்குடிக்குமாறு புத்திமதி கூறி அவரை விடுதலை செய்தார்.

# மட்டக்களப்பு-வாழைச்சேனை ரெயில்-கார் சேவை

## மீண்டும் ஆரம்பிக்கும்படி எம். பி. கோரிக்கை

மட்டக்களப்பு, சனி
மட்டக்களப்பு-வாழைச்சேனை ஆகிய இடங்களுக்கிடையே நடைபெற்றுக்கொண்டிருந்து தற்போது நிறுத்தப்பட்டுள்ள ரெயில்-கார் சேவையை மீண்டும் ஆரம்பிக்கும்படி, மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராசதுரை ரெயில்வே பகுதி அதிகாரியை வற்புறுத்தியுள்ளார்.

ரெயில்-கார் சேவை நிறுத்தப்பட்டுள்ளதால், மட்டக்களப்பின் வடபகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவ மாணவிகளும் உத்தியோகத்தர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் இந்த ரெயில்-கார் சேவையை, ஓட்டமாவடிக் கூடாக, வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலை வரை விஸ்தரித்தால், காகிதத் தொழிற்சாலை ஊழியர்களுக்கும் அச்சேவை பயன்படுமெனவும், மேலும் தாமதமின்றி இந்த ரெயில்-கார் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும் என்றும் திரு. இராசதுரை ரெயில்வேபகுதி அதிகாரிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## தோட்ட செய்திகள்

மாத்தளை, ஞாயிறு
மாத்தளை மாவட்டத்தைச் சேர்ந்த அம்பான்கங்கை தோட்டத்தில் வேலை செய்து வந்த குஞ்சன் என்பவரும் அவர் மனைவியும் தோட்டத்தை விட்டு விலகினர்கள். இவர்கள் சார்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மாத்தளை மாவட்ட உத்தியோகஸ்தர்கள் தலையிட்டு நடத்திய பேச்சு வார்த்தைகளின் மூலம் ரூபா 350 இவர்களுக்கு நஷ்டஈடாக தோட்ட நிர்வாகம் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

மாத்தளை மாவட்டத்தைச் சேர்ந்த ஓப்பகல்லை தோட்டத்தில் வேலை செய்து வரும் செம்புலிங்கம் என்ற தொழிலாழியை தோட்ட நிர்வாகம் தகுந்த காரணமின்றி வேலைநீக்கம் செய்தது. பின் மாத்தளை மாவட்ட இ. தொ. காங்கிரஸ் தலையிட்டு நடத்திய பேச்சு வாத்தைகளின் பயனல் திரு. செம்புலிங்கத்தை மீண்டும் வேலைக்கமர்த்த தோட்ட நிர்வாகம் ஒப்புக்கொண்டது.

## நயினதீவு நாகபூஷணி ஆலய உற்சவம்

ஊர்காவற்றுறை, சனி
தீவுப்பகுதியில் சரித்திரபிரசித்தி பெற்ற ஆலயமான நயினதீவு நாகபூஷணி அம்மாள் ஆலய வருடாந்த உற்சவம் அடுத்தமாதம் 3-ம் திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பிக்கப்பட்டு 16 நாட்களுக்கு நடைபெற விருக்கிறது. 16-ம் திகதி நடைபெறும் தேர்த்திருவிழாவை அடுத்தத் தீர்த்த தெப்ப உற்சவம் நடைபெறும்.

## சிங்களத்தில் பேச அனுமதி மறுப்பு

### அங்கத்தினர்கள் வெளிநடப்பு

கொழும்பு, ஞாயிறு
வைத்திய ஆராயச்சி கூட தொழில் நுட்ப ஊழியர் சங்கக்கூட்டத்தில் சில அங்கத்தினர்கள் வெளிநடப்பு செய்தார்கள்.

திரு. யு. டி. எஸ். வி. டி. சில்வா என்ற ஒரு அங்கத்தினர் சிங்களத்தில் பேச அனுமதி கோரியதற்கு, தலைவர் திரு. ஜே. ஈ. பி. பெர்ணண்டோ மறுத்ததைத் தொடர்ந்து இச் சம்பவம் நடைபெற்றது. 20 அங்கத்தினர்கள் வெளி நடப்புச் செய்ததாயும் தாங்கள் மற்ருேர் சங்கத்தை நிறுவப்போவதையும் திரு. சில்வா கூறினர்.

தோட்டத் தொழிலாளர் மத்தியில் கலை உணர்ச்சியைத் தட்டி எழுப்பவேண்டும் என்ற லட்சியத்தோடு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மாத்தளை மாவட்டப் பிரதிநிதி திரு. சிவாஜி செபஸ்தியான், ஒரு மாபெரும் கலைவிழா ஒன்றை 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் நடத்த மும்முரமாக ஏற்பாடுகள் செய்து வருகிருர்.

# "இசைக்கலை வளர்ச்சிபெற புனிதப் பண்பு அவசியம்"

கொடிகாமம், ஞாயிறு
'யாழ்ப்பாணக் குடாநாட்டில் தென்மராட்சியில் இசைகற்கும் மாணவர்களின் தொகையும் இசைக் கலைஞர்களின் தொகையும் கலையை ரஸிக்கும் மனப்பான்மையுடையவர்களும், கலையை ஆதரிக்கும் புனித நெறிபடைத்தவர்களும் அதிகமாக இருக்கின்ருர்களென்று சொல்ல நான் மகிழ்ச்சியடைகின்றேன். புனித முள்ளவர்களுக்கே இசைக் கலை வளர்ச்சியடையும்' என்று கலையரசு சொர்ணலிங்கம் முன்னெரு போது குறிப்பிட்ட பிரகாரம் இசையை ஆட்சி பண்ணுமவைரும் புனிதமானவர்கள் இப்புனிதப் பண்பு தவருது இசைக்கலைஞர்கள் நடந்து வந்தால் அவர்களின் இசை ஞானம் நன்கு வளர்ச்சியடையும் என்று மீசாலை தமிழிசைச் சங்கத்தின் சார்பில் மீசாலை வெள்ளை மாவடிப்பிள்ளையார் கோயில் முன்பாக அமைக்கப்பட்ட பந்தலில் நடைபெற்ற இசை விழாவின் முதல் நாள் வைபவத்திற்குத் தலைமையுரையும் ஆசியுரையும் கூறிய சாவகச்சேரிப் பிரதிநிதி திரு. வி. என். நவரத்தினம் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது: யாழ்ப்பாணத்தின் எப்பகுதியிலும் தென் மராட்சி இசைக் கலைஞர்கள் சங்கீதம் பயிற்றுகின்ருர்களென்று அறியும் போது நாம் 'பெருமைப்படவேண்டும். இலங்கையில் சங்கீதப் பல கலைக்கழகம் ஏற்படும் வரையும் தமிழ் மாணவர்கள் இந்தியா சென்று இசை பயில அநுமதிக்கும்படி கல்வி மந்திரியைக் கேட்டிருக்கின்றேன்.

திரு. எம். பஞ்சாபிகேச பிள்ளை கோஷ்டியினர்கள் நாதஸ்வர இசையுடன் தொடங்கிய இசை விழாவில் செல்வி கனகநாயகம் கனகரத்தினம், திருமதி கமலம் மகாலிங்கம், திருவாளர்கள் எஸ். பாலசிங்கம், பி. இளையதம்பி, ஆ. நமசிவாயம் என்போர் இசை விருந்தளித்தனர்.

## ஆங்கிலத்தின் அந்தஸ்து

புதுடில்லி, மே 27
ஆங்கில மொழிக்கு அப்பொழுதுள்ள அந்தஸ்து இனியும் தொடர்ந்திருப்பதற்கு வசதி செய்யும் மசோதாவொன்று விரைவில் கொண்டுவரப்படுமென்று உள்விவகார மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி தெரிவித்தார்.

## விற்பனை வரி மூலம் 450 லட்சம்

கொழும்பு, ஞாயிறு
நடப்பு ஆண்டு பட்ஜட்டில் விற்பனை வரி மூலம் ரூ. 450 லட்சம் வசூலிப்பதற்கான விதிகள் வெள்ளிக்கிழமை கோர்ட்டில் வெளியாகியிருக்கிறது. பட்ஜட் பற்ருக்குறையைச் சரிக்கட்டும் முயற்சியில் இத்தொகை சேர்க்கப்படும். இந்த வரி உடனடியாக அமுலுக்கு வராது. ஆனல் நிதிமந்திரி நிர்ணயிக்கும் ஒரு திகதியிலிருந்து இது அமுலாகும்.

இறக்குமதிப் பொருட்கள், உள்நாட்டுப் பொருட்கள் ஆகியவற்றுக்கு விற்பனை வரி விதிக்கப்படும். அத்தியாவசிய உணவுப் பொருட்கள், எண்ணை போன்ற பொருட்களுக்கு விற்பனை வரியிலிருந்து விதிவிலக்களிக்கப்படும். பாக்கு, வெற்றிலை, சாராயம் ஆகியனவும் இதில் அடங்கும்.

## தேயிலை உற்பத்தி அதிகரித்துள்ளது

கொழும்பு, சனி
முன்னைய வருடங்களை விட சென்ற வருடத்தில் தெயிலை உற்பத்தி அதிகரித்துள்ளதாக தேயிலை கட்டுப்பாட்டு அதிகாரி திரு. பி. மகாதேவா 1961-ம் வருடத்துக்கான நிர்வாக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# தோட்டத் தொழிலாளிக்கு

## நஷ்டஈடுகொடுக்க உத்தரவு

நாவலப்பிட்டி, ஞாயிறு
கொத்மலையைச் சேர்ந்த கடியஞ்சேனை பசுமலைத் தோட்டத் தொழிலாளி திரு. ஜோசப் என்பவர் தேயிலைத் தொழிற்சாலையில் வேலைசெய்யும் பொழுது ரோலரில் கைபட்டு இரு விரல்கள் துண்டிக்கப்பட்டிருந்தார். இவருக்கு நஷ்டஈடாகத் தோட்ட நிர்வாகம் 500 ரூபாய் கொடுக்க முன்வந்தது. இத்தொகை போதாதென்று ஆட்சேபித்து இ.தொ. காங்கிரஸ் தொழிற் கமிஷனரிடம் முறையிட்டது. கமிஷனர் நடத்திய விசாரணையின் பின் பிரஸ்தாப தொழிலாளிக்கு நஷ்டஈடாக 1500 ரூபாய் வழங்கவேண்டுமென்று இதில் சம்பந்தப்பட்ட டாக்டர் திரு. ஜோசப் சிபார்சு செய்தார். இப்பேச்சு வார்த்தைகளில் இ. தொ. காங்கிரஸ் பிரதிநிதிகளாக திரு. எம். அருணசலம், திரு. எம். எஸ். சாந்தப்பன், தோட்ட முதலாளி திரு. ரசீத் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# விதைநெல் விநியோக கடன் ரூபா 4,66,800

## இன்னும் வசூல் செய்ய முடியவில்லை

கொழும்பு, ஞாயிறு
வடமேற்கு மாகாணத்தில் விவசாயிகளுக்கு விதைநெல் சப்ளை செய்வதில் அரசாங்கத்திற்குச் செலுத்தப்படவிருக்கும் ரூபா 4,66,800-90 இன்னும் வசூலிக்கப்படவில்லை. எனவே இத்தொகையை தள்ளிவிடுமாறு குருநாக்கல் அரசாங்க அதிபர் திறைச்சேரியிடம் கோரியிருக்கிருர். ரூபா 4,73,413-96 பெறுமதியான விதைநெல் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டதில் ரூ. 6613-06 மட்டுமே வசூலிக்கப்பட்டது. மிகுதிப் பணத்தை வசூலிக்க செய்த சகல முயற்சிகளும் தோல்வியுற்றன.

ஆனல் இக்கடன்களைத் தள்ளிவிடுவதை ஆடிட்டர் ஜெனரல் ஆட்சேபித்துள்ளார். குருநாகல் கச்சேரி அதிகாரிகளின் அசிரத்தையினல்தான் இக்கடன் வசூலாகவில்லை என அவர் கருதுகிருர். விதைநெல் விநியோகித்ததற்கான தஸ்தாவேஜுகள் காணப்படவில்லை என்றும், யார் யாருக்கு விநியோகம் செய்யப்பட்டது என்பது எந்தப் புத்தகத்திலும் பதிவாகவில்லையென்றும் அவர் கூறியிருக்கிருர். குருநாக்கல் அரசாங்க அதிபரிடமிருந்து இதுசம்பந்தமாக முழு அறிக்கை ஒன்றைப் பெறுமாறு ஆடிட்டர்ஜெனரல் திறைச்சேரிக்கு அறிவித்திருக்கிருர்.

# யாழ்ப்பாணத்தில் விளையாட்டு விழா நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண நகரம் இது வரை கண்டிராத வகையில் ஆனி மாதம் 8-ம் 9-ம் திகதிகளில் விளையாட்டுவிழா ஒன்றினை நடத்தத் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இவ்விழாவில் பல தரப்பட்ட இலங்கையின் முன்னணி விளையாட்டு வீரர்கள் பங்கு கொள்வர்.

இவ்விழாவிற்கு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வி. பி. வித்தாச்சியை போஷகராகக் கொண்ட நிர்வாகக்குழு ஒன்று செயல்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி திரு. என். சிவஞானசுந்தரம் தலைவராகவும், யாழ்ப்பாண நீதிபதியும், யாழ்ப்பாண உதைபந்தாட்ட சங்கத்தின் தலைவருமாகிய திரு. அரசுவால்டன் உபதலைவராகவும் யாழ்ப்பாண விளையாட்டுச் சங்கத்தின் தலைவர் டாக்டர் சீ. மயில்வாகனம் இதன்கூட்டு நிர்வாகிகளுள் ஒருவராகவும் கடமையாற்றிவருகின்றார்கள்.

நிருவாகக்குழுவின் விருப்பத்திற்கிணங்கவும் இலங்கை ஒலிம்பிக் காமன்வெல்த் விளையாட்டுக் கழகத்தினால் கொழும்பில் நடாத்தப்பட்டதுமான விளையாட்டுவிழாவிேனாடும் தொடர்பு கொண்ட யாழ்நகரில் இவ்விழாவிற்குரிய ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

ஆனிமாதம் 8-ம் 9-ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் விளையாட்டுக்களுக்கு ஒரு திட்டம் வரைந்திருக்கிறார்கள்.

இவ்விளையாட்டுப் போட்டிகள் கொழும்புப் பாடசாலைகளைச் சேர்ந்த கிரிக்கட் வீரர்களுக்கும் யாழ்ப்பாணத்துப் பாடசாலை வீரர்களுக்குமிடையில் நடைபெறவிருக்கும் கிரிக்கட் போட்டியுடன் ஆரம்பிக்கும்.

இரண்டு வருடங்களுக்கு முன் இப்படியானதோர் போட்டி இடம்பெற்றது. அதில் யாழ்ப்பாண வீரர்கள் போதிய திறமை காட்டினர்கள்.

விக்ரர் விஜயரட்டினம் ஞாபகார்த்த பாஸ்கற் பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பங்குபெற இலங்கை வரவிருக்கும் பாரதக் கோஷ்டியை யாழ்நகருக்கு வரவழைக்கத் தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

## இந்தக் கருவாடு வேண்டாம்

கொழும்பு, திங்கள்

அட்டகலன், குக்குல்கொறன பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் வாங்கப்பட்ட 20,000 ரூபாவிற்கு மேலான பெறுமதியுள்ள கருவாடு மனிதர்களால் உணவுக்கு எடுத்துக் கொள்ள முடியாத நிலையில் இருந்த காரணத்தால் அக்கருவாட்டை கொழும்பு கூட்டுறவு மொத்த ஸ்தாபனத்திடம் திருப்பிக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இக்கருவாடு றக்குவானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஐக்கிய பண்டகசாலைக்கு விநியோகிக்கப்பட்டது. றக்குவானை எம். பி. திரு. வி. ரி. ஜி. கருணாரத்தின கருவாட்டை உபயோகத்துக்கு எடுத்துக் கொள்ள முடியாதென்றும் அது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குத்திருப்பி அனுப்பப்படும் என்றும் கூட்டுறவுச்சங்க மனேஜருக்குத் தந்திமூலம் தெரிவித்தார்.

## கங்காணிக்கு மீண்டும் வேலை

நாவலப்பிட்டி, சனி

வத்தேகம ஹரத்தனை தோட்டத்தில் கடந்த பத்து வருடங்களாக கங்காணி வேலை செய்த சந்தனம், சுப்பையா, பெரியசாமி ஆகியோருக்கு தோட்ட நிர்வாகத்தினால் கங்காணி வேலை நிறுத்தப்பட்டிருந்தது.

கண்டி உதவி தொழிற் கமிஷனர் திரு. உணம்புவ தலைமையில் நடைபெற்ற சமரச பேச்சுவார்த்தைகளின் பின் மீண்டும் கங்காணி வேலை கொடுக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டது. திரு. சந்தனம் என்பவருக்கு 20 சதம் சம்பள உயர்வு அளிக்கப்பட்டது. கடந்த காலத்தில் வேலை நிற்பாட்டிய நாட்களை லீவு சம்பளத்திற்கு கணக்கெடுப்பதெனவும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இதர பிரச்னைகள் மற்றொரு திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

திங்கள் 28-5-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரை இசை, 8-00 கிளாரினெட், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சிதிதிரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை, 5-15 கிராமசஞ்சிகை, 6-45 வாத்தியக்கோஷ்டி.

இரவு 7-00 நேயர் விருப்பம், 7-30 நீலாவதி இரத்தினசிங்கம்-வீணை, 8-00 முஸ்லிம் நிகச்சி, 9-15 தமிழ்மூலம்சிங்களம், 9-30 குரல்வகை, 9-45 வி. சுந்தரம்-பாட்டு.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 கே. லலிதா பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 என். வீரசாமி-கிளாரினெட், 1-30 குரலிசை' 1-50 வாத்திய இசை, 2-10 எம். ஹரிசங்கர பாகவதர்-பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடககங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப்பாடல், 7-35 இலக்கியஏடு, 7-40 திரைப்படஇசை, 8-00 கே. லலிதா-பாட்டு, 8-30 என்.வீரசாமி-கிளாரினெட், 9-30 இசைக் கோவை.

## சரவணைக் கோஷ்டி வெற்றி

ஊர்காவற்றுறை, சனி

சரவணை கரப்பந்தாட்டக் கோஷ்டிக்கும், தம்பாட்டி கரப்பந்தாட்டக் கோஷ்டிக்கு யிடையே அண்மையில் நடந்த சிநேக பூர்வமான கரப்பந்தாட்டப் போட்டியில் சரவணைக் கோஷ்டி வெற்றி பெற்றது. சரவணை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு. அருளானந்தம்மத்தியஸ்தரகக் கடமையாற்றினர்.

## தோட்டத்தில் திடீர் மரணம்

காங்கேசந்துறை, ஞாயிறு

தையிட்டியைச் சேர்ந்த அப்புக்குட்டிகந்தையா என்பவர் தோட்டத்திற்கு நீர் இறைத்துக் கொண்டிருக்கையில் மரணமானது சம்பந்தமாக மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. வெஸ்லி டி. தாமேதரம் மரண விசாரணை நடத்தினர். கந்தையா விசுவர், உட்பட பலர் சாட்சிய மளித்த பின் மாஜிஸ்டிரேட் பிரேதபரி சோதனை நடத்துமாறு காங்கேசந்துறை டிஸ்திரிக் வைத்திய அதிகாரிக்கு உத்தரவிட்டு மேல்விசாரணையை அடுத்த மாதம் 1-ம் திகதி வரை ஒத்திவைத்தார். காங்கேசந்துறை பொலிஸ் நிலைய கான்ஸ்டபிள் பெரேரா சாட்சிகளை ஆஜர் செய்தார்.


---

சென்னை, மே 27

தமிழ் நாட்டில் பாடசாலைகளில் நான்காவது வகுப்பிலிருந்தே ஆங்கிலம் போதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுவரை ஐந்தாவது வகுப்பிலிருந்துதான் ஆங்கிலக் கல்வி அளிக்கப்பட்டுவந்தது.


ஈழநாட்டினர் ஆசையோடு அருந்தும் மால்டெட் பால்

ஆச்சரியப்படவும் வேண்டுமா? நெஸ்டோமோல்டில் ... விருப்பதால் அனைவரும் அருந்த ஆசைப்படுகின்றனர்! ... நீங்கள் ஒரு நெஸ்டோமோல்ட் பிரியராக விருக்க வேண்டும் ... மாக எல்லோரும் அப்படியே); அப்படியில்லாதபட்சத்தில், ... இதன் இனிய சுவையை பருகி அறியுங்கள்—மகிழ்ச்சியடைவீர்களே தவிர மனம் வருந்தமாட்டீர்கள்! சூடாகவோ அல்லது ஐஸ்—குளுமையாகவோ அருந்தக்கூடிய நெஸ்டோமோல்ட், நாள் முழுக்க உற்சாகத்துடன் திகழச் செய்யும் வெறும் புத்துணர்ச்சியூட்டும் பானமோ அன்றியும் சுவை நிரம்பிய தாக சாந்தியோ அல்ல! டின்னை உற்றுப் பார்த்தால் உண்மை விளங்கும்—நெஸ்டோமோல்ட் உங்களுக்கு எத்துணை அளவு நன்மை புரிகின்றதென்பது புலப்படும்! இழந்த வலிமையை மீட்கவும், கட்டுமஸ்தான தேகத்தோடு மிளிரவும் உறுதுணை புரியும் ஊட்டச் சத்துக்களும், ஆரோக்கியமூட்டும் பொருட்களும் இதில் செழுமையாக அடங்கியுள்ளன. அளப்பரிய நன்மையும், சுவையும் ஒருங்கே அளிக்கின்றது என்றளவில் நெஸ்டோமோல்ட் நிகரற்று விளங்குகின்றது!




நான் விரும்புவது நெஸ்டோமோல்ட் அதெனக்கு நன்மையை அளிக்கிறது!

# திருமலை இந்துக்கல்லூரி ஓலைக் கட்டிடம்

## முற்றுகத் தீக்கிரையானது

திருக்கோணமலை, ஞாயிறு

திருக்கோணமலை இந்துக் கல்லூரியில் ஓலையால் வேயப்பட்ட கட்டிடம் இரண்டு தினங்களுக்கு முன் தீக்கிரையாகி விட்டது.

இதே கட்டிடத்தின் ஒரு பகுதி இரண்டு வாரங்களுக்கு முன் தீப்பிடித்து எரிந்தது. இத்தீ விபத்து சம்பந்தமாக விசாரணை நடத்திய பொலிசார் தீவிபத்துக்கு நாசவேலை காரணமாக இருக்கலாமென சந்தேகம் தெரிவித்தனர்.

கட்டிடம் முற்றுகத் தீக்கிரையாகி விட்டது. இது பற்றி கல்வி இலாகாவைச் சேர்ந்த விசாரணைக்குழு வொன்று இப்பொழுது விசாரணை செய்து வருகிறது.

சென்ற மாதம் தான் இக் கல்லூரியை அரசாங்கம் தனது உடமையாக்கியது.

## லஞ்சம் பெற்ற மாஜிஸ்டிரேட்டுகள்

வியன்னு, மே 27

லஞ்சம் வாங்கியதாக 4 புடாபெஸ்ட் மாஜிஸ்ட்டிரேட்டுகளுக்கு 2 வருடம் முதல் 4 வருடம்வரை சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

## பண்டத்தரிப்பில் பாடசாலை தேசிய சே[illegible]

யாழ்ப்பாணம், திங்கள்

பண்டத்தரிப்பு சைவ ஆங்கில வித்தியாசாலையில் ஆசிரியை செல்வி எஸ். வேலுப்பிள்ளை தலைமையில் தேசிய சேவைத்திட்டத்தின் கீழ் இப் பாடசாலையை சுத்தம் செய்தனர். விளையாட்டுமைதானத்தையும் திருத்தம் செய்தனர்.

## நீதிமன்றத்தில் களவு!

அம்பாந்தோட்டை, ஞாயிறு

அம்பாந்தோட்டை மாஜிஸ்ட்ரேட் திரு. சி. எல். ரி. முனுமாலி நீதிமன்றத்துக்கு வந்த பொழுது, பொலிசாரால் நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்ட கஞ்சா பொட்டலம் களவாடப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இத்தகவலை தலைமைக் குமஸ்தா மாஜிஸ்ரேட்டிடம் தெரிவித்தார். விரல் அடையாளப் பதிவாளர் வரும்வரை பதிவு அறையை சீல் இட்டு பொலிஸ் காவல் இடுமாறு மாஜிஸ்ரேட் கட்டளையிட்டார்.

பொலிசார் புலன் விசாரணை நடத்துகின்றனர்.

## நயினைதீவுக் கோஷ்டிக்கு மீண்டும் வெற்றி

யாழ்ப்பாணம், ஞாயிறு

அரியாலை ஸ்ரீ கலைமகள் சன சமூக நிலையத்தாரால் நடாத்தப்படும், கலைமகள் சவால் கிண்ணச் சுற்றுப்போட்டியில் 27-5-62 ல் அன்று நயினை தீவுக் கோஷ்டிக்கும், சிவியா தெரு கோஷ்டியினருக்குமிடையில் நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் நயினைதீவுக் கோஷ்டி முறையே 15—2, 15—14 ஆகிய புள்ளிகளால் வெற்றியை ஈட்டியது. பெருந்திரளான மக்கள் இப் போட்டியைப்பார்த்து ரசித்தனர்.

மறுபடியும் 2-6-62 -ல் நயினை தீவு கோஷ்டிக்கும், கலைமகள் "பி" கோஷ்டிக்குமிடையில் போட்டி நடைபெறும்.

## பாலம் இடிந்து 20 பேர் பலி

பெல்கிரேட் மே, 27

யூகோஸ்லேவியாவில் 60 பேர் ஒரு பாலத்தைக் கட்டிக் கொண்டிருந்தபோது, அது இடிந்து விழுந்ததால் 20 பேர் கொல்லப்பட்டனர்.

## நீதிமன்றம் கலைக்கப்பட்டது

பாரிஸ், மே 27

முன்னுள் ஓ. ஏ. எஸ். தலைவர் ஸலானுக்கு ஆயுள்தண்டனை விதித்த நீதிமன்றத்தை பிரெஞ்சு அதிபர் ஜெனரல் டிகால் கலைத்துவிட்டார். இந்த நீதிமன்றம் ஓராண்டுக்கு முன்னர் அமைக்கப்பட்டது.

## போர்த்துக்கலில் கம்யூனிஸ்டுகள் கைது

லிஸ்பன், மே 27

போர்த்துக்கலில் பல கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். சமீபத்திய கிளர்ச்சிகளுக்கு இவர்களே காரணம் எனக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

## கென்னடி—சிறிமா கடிதம்

கொழும்பு, சனி

அமெரிக்கா அணுஆயுத சோதனைகளை மீண்டும் ஆரம்பித்ததற்கு வருத்தம் தெரிவித்து பிரதமர் சிறிமா பண்டாரநாயக்கா ஜனாதிபதிகென்னடிக்கு எழுதிய கடிதமும் அதற்கு திரு. கென்னடி எழுதிய பதிலும் நேற்று இங்கு வெளியிடப்பட்டது.

## புத்தர் போதனைகளைச் சாதனைசெய்க

### திவ்ய ஜீவன சங்கத்தில் டாக்டர் பேச்சு

நல்லூர், மே 27

"புத்தர் பெருமானின் உயரிய போதனைகளில் தீண்டாமை ஒழிப்பும், கொல்லாமையும் முக்கியமாகக் கூறப்பட்டபோதிலும் அவை இன்னும் அழியாது சமுதாயத்தின் அஸ்திவாரத்தை அரித்துக் கொண்டிருப்பது பெரிதும் வருத்தத்தை உண்டாக்குவதொன்றாகும். அன்புநெறியைப் பின்பற்றும் இந்த திவ்ய ஜீவன சங்கமும் இதைப் போன்ற மற்றைய சங்கங்களும் இத்தீமைகளை விலக்கி புத்தரின் போதனைகளை சாதனையாக்கவேண்டுமென்பதே எனது பேரவாவாகும்."

புனித வெசாக் தினத்தையும் முருகப்பெருமானது ஜயந்தியையும் கொண்டாடுமுகமாக சனிக்கிழமையன்று மாலை, யாழ்ப்பாணம் திவ்ய ஜீவன சங்கக்கிளைப் பிரார்த்தனைக் கூட்டமொன்றில், புத்தர்பெருமானைப்பற்றிப் பேசும்பொழுது டாக்டர் சிவஞானசுந்தரம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:—

"தீண்டாமையும், தெய்வத்தின் பெயரில் புரியப்படும் உயிர்க்கொலைகளும் முன்பு இருந்த கோரசொரூபத்துடன் இன்று இல்லாதிருப்பினும் அவை இன்னும் ஒழியவில்லை என்பது யாவரும் அறிந்ததே. ஆலயக்கதவுகள் திறக்கப்பட்ட போதிலும் மக்களில் ஒரு சாராரது உள்ளங்கள் இன்னும் திறக்கவில்லை.

அன்பு, தர்மம், விரதம், தியாகம், அஹிம்சை, பொறுமை, சகிப்புத்தன்மை ஆகிய உயர் பண்புகளைப் போதித்த புத்தபிரானது திருவடிகளைப்பின் பற்றுவதாகக் கூறும் பெரும்பான்மை மக்களையுடைய இந் நாட்டில் இந்தப்பண்புகள் குறிப்பாகக் குறைந்து காணப்படுவது மிகுந்த வெட்கத்தையும் வருத்தத்தையும் அளிப்பதாகும்."

திவ்விய ஜீவனசங்க யாழ்ப்பாணக்கிளைக் காரியதரிசி திரு. எஸ். கனகரத்தினத்தின் தலைமையில் நடைபெற் மேற்படி கூட்டத்தில், முருக நாமபஜனையும் புத்தர் பெருமானைப் பற்றிய பக்திப்பாடல்களும் நாமாவளிகளும் இடம் பெற்றன.

## பர்மாவுக்கு மேல் அந்நிய விமானங்கள்

ரங்கூன், மே 27

பர்மாவுக்கு மேலாகச் சில அந்நிய விமானங்கள் முறை தவறிப் பிரவேசிப்பதாயும், இதுசம்பந்தமாகச் சம்பந்தப்பட்ட நாடுகளின் தூதர்களிடம் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டிருப்பதாயும் அரசாங்கம் அறிவித்துள்ளது. அடையாளம் தெரியாத ஜெட் விமானங்கள் இவ்வாறு பறந்தனவாம்!

## குருஷேவிற்குப் பாராட்டு

மாஸ்கோ, மே 27

லாவோஸில் நடுநிலைமை அரசாங்கத்தை ஆதரித்து ரஷ்யத்தலைவர் குருஷேவ் வெளியிட்டுள்ள அறிக்கையை அடுத்து திரு. குருஷேவிற்கு சுவர்ணபூமா பாராட்டுதல்களைத் தெரிவித்துள்ளாரென ரஷ்யப் பத்திரிகையான 'டாஸ்' இன்று அறிவித்தது.

## இந்தோனேஷியாவும் படையனுப்பும்

ஜாகர்த்தா, மே 27

ஈராக்கிற்கு நெதர்லாண்ட்ஸ் தொடர்ந்து படைகளை அனுப்பினல் இந்தோனேஷியாவும் முப்படைகளை அனுப்பத் தயங்கமாட்டாதெனஇந்தோனேஷிய பாது காப்பமைச்சர் இன்று அறிவித்திருக்கிருர்.

## ஐயாறன்

(4-ம்பக்கத் தொடர்ச்சி)

என்று பேசினராம் அடிகளார். முடிவில் போட்டியை வாக்கெடுப்புக்கு விட்ட போது, அடிகளாரைவிட நெடுஞ்செழியனுக்கு இரட்டிப்பு வாக்குகள் அதிகமாகக் கிடைத்ததாயும், போட்டியில் நெடுஞ்செழியனே வென்றதாயும் தலைவர் அறிவித்ததாக ஒரு செய்தி கூறுகிறது.

இதைப் பார்த்ததும், முன்னர் இலங்கை சர்வகலாசாலை யூனியனில் "மாணவர் அரசியலில் கலந்துகொள்ளலாமா?" என்ற விஷயமாக நடந்த ஒரு விவாதம் நினைவுக்கு வருகிறது. கலந்து கொள்ளலாம் என்று ஒருபிரமுகரும், கூடாது என்று ஒருமாணவரும் வாதித்தனர். தலைமைவகித்த ஒரு மாணவி, விவாத முடிவில் வாக்கெடுப்புக்கு விடாமல், பிரமுகருக்கு நன்றிகூறி மிக சாமர்த்தியமாக அதை முடித்தார். ஓட்டுக்குவிட்டிருந்தால் அக் கூட்டத்தில் அந்த மாணவரே நிச்சயம் வெற்றியிருப்பார். பிரமுகர் மனம் எப்படி இருக்கும்!

* * *

உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன்
கோயில் கொண்டான் என
உடம்பினை யானிந்து ஓம்புகின்றேனே
— திருமூலர்

## கிறிஸ்மஸ் தீவுக்கு சென்றனர்!

வாஷிங்டன், மே 27

அணு சோதனை நடத்தப்படும் இடமான கிறிஸ்மஸ் தீவை நோக்கி ஒரு சிறு படகில் சென்ற மூன்று அமெரிக்கர்கள் கைது செய்யப்பட்டதாய் அறிவிக்கப்படுகிறது.

## வடமாகாண கிரிக்கெட் வீரர் 1962

'விக்னராஜா' பரிசுக் கிண்ணத்துக்காக 'ஈழநாடு' நடாத்தும் தெரிவு.

1962-ம் ஆண்டின் வடமாகாண கிரிக்கெட் வீரராகப் பின்வருபவரை நான் தெரிவு செய்கின்றேன்.

கிரிக்கெட் வீரர் ..........

கல்லூரி ..........

எனது பெயர் ..........

விலாசம் ..........

* இக்கூப்பனைக் கத்தரித்து 'கிரிக்கெட் வீரர் 1962', C/o. 'ஈழநாடு', தபாற்பெட்டி எண்: 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்புக.

வெகு விரைவில் எதிர்பாருங்கள்!
சிறந்த திரைப்படங்களை ஆண்டு தோறும் வெளியிடும்
சினிமாஸ் லிமிட்டெட் திரைகளில்
எஸ். எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி,
எம். ஆர். ராதா, சௌகார் ஜானகி,
எஸ் வி. ரங்கராவ், பி. எஸ். சரோஜா, எஸ். ராமராவ்
ஆகியோர் நடித்த
மாடர்ன் தியேட்டர்ஸ்
குமுதம்
இசை: கே. வி. மகாதேவன்
டைரக்ஷன்: ஏ. சுப்பராவ்

3-வது கடைசி வாரம்!
கெப்பிட்டல் (கொழும்பு) விஜயா (மட்டக்களப்பு)
மொடர்ன் (பதுளை) விஜிதா (மஸ்கெலியா) கிரசன்ட் (புத்தளம்)
ஈ. வி. சரோஜா, டி. ஆர். மகாலிங்கம்
எம். ஆர். ராதா, அசோகன், எம். வி. ராஜம்மா
பத்மினி பிரியதரிசனி
நடித்த
இரத்தினபுரி இளவரசி
டைரக்ஷன்: ராமண்ணா

7வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
மற்றும் 11 திரைகளில்
சிவாஜி கணேசன் - பி. சரோஜா தேவி
நடித்த
பாலும் பழமும்

மனோஹரா (யாழ்ப்பாணம்) என். டி. ராமராவ், ராஜசுலோசனா
நடித்த
ராஜமகுடம்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு மே மாதம் 28-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.